முழக்கம் 01
பங்குனி

# யாழ் முழக்கம்

யாழ் 01



## அமெரிக்கா தமிழருக்கு கை கொடுக்குமா?



## வடமராட்சி மண் பெற்றெடுத்த சூப்பர் சிங்கர் ஜெசிக்கா


விலை 80/=

yaalmulakkam@gmail.com

பல்சுவை மாத இதழ்

# JK FITNESS

0772395819



**JK FITNESS as our life style**

weight loss & conditioning
Weight & muscles gain
Personal training & meal plans
relaxed & friendly almosphere
no nonsense just results achieving your fitness goal just got easier choose

Main Street,
Saraiady,
Puloly.

# THARAN

## GOLD HOUSE

## தாரன் நகைமாளிகை



**Genuine 916 Gold**



தரம்
நிரந்தரம்
நம்பிக்கை

Branch 1
M.M.V. Road, Nelliady,
Karaveddy.

TP : 0602219254
Mobile ; 0773276356

Branch 2
Main Street,
point Pedro.

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து....



"யாழ்முழக்கம்" என்ற இச்சஞ்சிகை ஊடாக உங்களுடன் உறவாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். புதிய சூழலில் ஒரு புதிய வரவாக யாழ் மண்ணில் இருந்து "யாழ்முழக்கம்" என்ற இச்சஞ்சிகையை பிரசுரிக்கின்றோம். ஏற்கனவே வெளிவந்த வான்முழுக்கம் என்ற சஞ்சிகைக்கு நீங்கள் உரம் ஊட்டியது போன்று "யாழ்முழக்கம்" என்ற இச்சஞ்சிகைக்கும் உரம் ஊட்டுவீர்கள் என திடமாக நம்புகின்றேன். இச்சஞ்சிகை ஆனது என்னிடம் ஊடகக்கல்வியை பயின்ற மாணவர்களின் முழுமையான அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக வெளிவரும் ஒரு சஞ்சிகை ஆகும். எமது மக்களினதும், இந்த மண்ணில் வித்தாகிப் போனவர்களின் கனவுகளிற்கும் இச்சஞ்சிகை உரம் ஊட்டும் என நம்புகின்றேன். முள்ளிவாய்க்கால் அவலங்களின் பின் பலர் தமிழ் தேசியம் பேசிக்கொண்டு புதிதாக முளை விட்டுள்ளார்கள் இவர்களிற்கு எல்லாம் இச்சஞ்சிகை சாட்டை அடி கொடுத்து உண்மையான தமிழ் தேசியத்திற்கு உரம் ஊட்டும் என திடமாக நம்புகின்றேன்.



அன்புடன்
வே.தவச்செல்வம் (J.P)
(பிரதம ஆசிரியர்)

### ஆசிரியர் குழுவினர்

| | |
|---|---|
| ப.அபிலாஷா | சி.கர்ணிகா |
| ச.பவானி | ச.லாவண்யா |
| சு.டர்சிகா | சு.நிறஞ்சிதா |
| றெ.ஜனுசன் | சி.நவீந்திரா |
| த.ஜெனித்தா | ம.நிதர்சனா |
| வா.ஜெயமீரா | இ.விதுர்ஷா |
| யோ.கிருஷாந்தினி | |


பிரதம ஆசிரியர்
வே.தவச்செல்வம் (J.P)
தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.
T.P : 0779229842
E-mail : Yaalmulakkam@gmail.com

# உள்ளே .................


| | | பக்க. இல |
|---|---|---|
| 1. வாழ்த்துரை | | 01 |
| 2. அமெரிக்கா தமிழர்களிற்கு கை கொடுக்குமா? | | 02 |
| 3. மாணவர் உலகம் | | |
| I. | வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப வாழ்க்கை | 04 |
| II. | தமிழ் தேசியத்தை கொல்லாதீர்கள் | 06 |
| III. | இடப்பெயர்வுகளும் வரலாறுகளும் | 08 |
| III. | தமிழ் இலக்கியம் புகழப்படுவது ஏன்? | 10 |
| 4. மேரி அன்னி | | 11 |
| 5. நாற்சந்தியில் | | 12 |
| 6. கவி முழக்கம் | | 14-19 |
| 7. அனுவின் வாழ்க்கைப் பாதை (தொடர்கதை) | | 20 |
| 8. கட்டுரைகள் | | |
| I. | ஆண்பெண் சமத்துவம் | 21 |
| II. | இளைஞர்களின் வாழ்வை சீரழிக்கும் தொலைபேசி | 24 |
| III. | கூட்டுறவுத் துறையில் இடம்பெறும் மோசடிகள் | 26 |
| 9. கலைஞர் உலகம் | | |
| I. | ஈழக்குயில் ஜெசிக்கா............ | 27 |
| II. | பிரதேச செயலாளர் த. ஜெயசீலன் அவர்களுடன் ஒரு நேர்காணல் | 29 |
| 11. அறிவியல் | | |
| I. | கறுப்பு ஒளி என்றால் என்ன? | 32 |
| II. | கணனி வன்பொருள் | 33 |
| III. | துணைச் சேவைகளின் முன்னேற்றம் | 35 |
| 10. பச்சை ஆட்டோ | | 36 |
| 11. வெயிலைச் சமாளிக்க அட்டகாசமான குறிப்புக்கள் | | 38 |

**வடமராட்சி மண்ணில் ..............**

ACS கணணி நிறுவனத்தில் முதல் தடவையாக ஊடகவியல் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

நீங்கள் : - வேலை தேடுபவரா?

வானொலி, தொலைக்காட்சி, இணையம், பத்திரிகை போன்றவற்றில் பணியாற்ற விரும்புகிறீர்களா?

**விரைவாக பதிவுகளிற்கு முந்துங்கள்**


மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு பதிவிற்கு முந்துங்கள்.

சான்றிதழ் வழங்கப்படும்

1ம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை

தொ.பே : 0789072260, 0783035181

## NCA கல்வி நிறுவன நிர்வாகியின் வாழ்த்துரை




பருத்தித்துறையில் NCA கல்வி நிறுவனம் 40 ஆண்டுகள் தனது சேவையை பூர்த்தி செய்வதை ஞாபகம் ஊட்டும் வகையில் வட பிராந்தியத்திலே முதன் முதலாக எமது நிறுவனத்தில் ஊடகவியல் என்ற கற்கை நெறியை ஆரம்பித்து பயிற்றுவித்து பயின்ற மாணவர்களால் வெளியீடு செய்யும் "யாழ்முழக்கம்" என்ற சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாணவர்களின் தளராத முயற்சிக்கு எடுத்துக்காட்டாக இச்சஞ்சிகை வெளியீட்டை கூறலாம். "யாழ்முழக்கம்" என்ற பெயரில் வரும் இச்சஞ்சிகையானது ஈழத்தில் வாழ்கின்ற தமிழ் அன்பர்களின் உள்ளங்களுக்கு உவகை பொங்கும் வகையில் உன்னத சஞ்சிகையாக அமையும் என நம்புகிறேன்.

முழங்கவிருக்கும் இச்சஞ்சிகைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து ஊடகவியல் அறிவை புகட்டிய ஊடகவியலாளர் திரு வே.தவச்செல்வம் அவர்களை பாராட்டுகின்றேன்.

இவ் ஊடகவியல் மாணவர்களின் "யாழ் முழக்கம்" என்ற சஞ்சிகையானது எல்லோர் மனதிலும் நிலை பெற்று தொடர்ந்து முழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.




திரு. N. சந்திரலிங்கம்
நிர்வாக இயக்குனர்
NCA கல்வி நிறுவனம்
பருத்தித்துறை.

# அமெரிக்கா தமிழருக்கு கை கொடுக்குமா?



தமிழர்களின் அரசியல் பிணக்கு இழுபட்டுச் செல்வதற்கு தனியே இலங்கை அரசை மட்டும் குற்றம் சாட்டி விட முடியாது. மாறாக பூகோள அரசியலும் பிராந்திய நலன்களும் மேற்குலகின் நிகழ்ச்சி நிரல்களும் தான் தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் அச்சாணியாக செயற்பட்டு வருகிறது. தமிழர்கள் பலமான சக்தியாக முப்படையையும் கொண்ட ஒரு பெரிய இராணுவ பலத்துடன் இருந்த காலப்பகுதியல் தமிழர்களின் படைக் கட்டமைப்புக்களையும் அதன் தன்னிகரில்லாத் தலமைத்துவத்தையும் இல்லாது செய்ய வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருந்தது. இதற்கு சாட்சியமாக அமெரிக்காவின் ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்புடன் அமெரிக்காவின் ராஜதந்திரியான "றிச்சேட் ஆர்மிரேச்" என்பவரும் செயற்பட்டு வந்தனர். விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று கடுமையாக விமர்சித்து வந்த இவர் புலிகளை அழிப்பதற்கு அன்றைய சந்திரிக்கா அரசாங்கத்திற்கு ஊக்கம் கொடுத்து வந்தார். ஆனால் மாறாக புலிகளின் படைவலுச்சமநிலை அன்றைய நாட்களில் வலுவாக இருந்ததால் சந்திரிக்கா அரசாங்கம் புலிகளிடம் கடுமையாக வாங்கிக் கட்டியது. ஆனால் பின்னைய நாட்களில் புலிகளின் கட்டமைப்புக்கள் முழுவதையும் மகிந்தராஜபக்ஸ அரசாங்கம் மேற்குலகினதும் இந்தியாவினதும் முழுமையான உதவியுடன் அழித்தொழித்தனர். இவர்களுடன் சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட 38 நாடுகளிற்கு மேல் புலிகளை அழிப்பதற்கு அன்றைய ஆட்சியாளர்களிற்கு உதவி செய்தனர். இவ்வாறு உதவி செய்ததால் தான் புலிகளை அழிக்க முடிந்தது. இந்த விடயத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். புலிகள் எந்த நாட்டின் உதவியும் இன்றி எந்த விட்டுக் கொடுப்பும் இன்றி முள்ளிவாய்க்கால் வரை தாக்குப் பிடித்தமை தமிழர்களின் போரியல் வரலாற்றில் சாதனை என்றே சொல்ல முடியும்.

ஆனால் பின்னைய நாட்களில் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் நிகழ்ச்சி நிரல்கள் இலங்கையில் முற்று முழுதாகவே பிழைத்துவிட்டன. அதாவது மேற்குலகையும் இந்தியாவையும் அராஜக ரீதியில் மகிந்த அரசாங்கம் ஏமாற்றியதுடன் மட்டும் நிற்காமல் இந்த நாடுகளின் கருத்துக்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் சீனாவின் தாளத்திற்கு இலங்கை ஆட வெளிக்கிட்ட போது தான்




இந்தியாவும் விழித்துக் கொண்டது. இதனை அடுத்து மேற்குலகும் அமெரிக்கா தலைமையில் போர்க்குற்ற விசாரணைக்கு பிள்ளையார் சுழி

போட்டது. இந்த போர்க்குற்ற விசாரணை சரியாக நடந்தால் அல்லது சரியாக நடந்திருந்தால் இலங்கையில் பலர் கம்பி எண்ண வேண்டி வந்திருக்கும். ஆனால் புதிதாக பொறுப்பெடுத்துள்ள மைத்திரி அரசானது மேற்குலகுடன் ஒரே நிகழ்ச்சி நிரலில் தான் இனிமேல் பயணிக்கப் போகின்றது. இதனால் போர்க்குற்ற விசாரணை கூட புஸ்வாணமாகலாம். இதன் அறிகுறியாகவே ஜெனீவா அமர்வில் இலங்கை விவகாரம் இம்முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது ராஜீக ரீதியில் தமிழரிற்கு கிடைத்த பின்னடைவே ஆகும். ஒட்டு மொத்தத்தில் தமிழர்களின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சனையும் தீர்க்கப்படாமல் இழுபடவே போகிறது. அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் தமிழர் நலன்களை விட அவர்களது பிராந்திய நலன்களே முக்கியமானவை, எனவே அமெரிக்கா தமிழர்களிற்கு கை கொடுக்கும் என்ற தமிழர்களின் நம்பிக்கையும் விரைவில் புஸ்வாணமாகலாம்!

வே.தவச்செல்வம்

< < < < < < < < < < < < <




## சிந்தனைத் துளிகள் ........

- எல்லையற்ற ஊக்கம்
  தளர்வில்லாத நெஞ்சுறுதி
  சளைக்காத உழைப்பு
  நேர்மையான பாதை - வெற்றி
  கிடைக்காமலா போய்விடும்?

- நேற்றைய பொழுதும் நிஜமில்லை
  நாளைய பொழுதும் நிச்சயமல்ல
  இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

- நீங்கள் ஒரு வாய்ப்பை தவறவிட்டால்
  உங்கள் விழிகளைக் -
  கண்ணீரால் நிரப்பாதீர்கள்!
  உங்கள் கண்ணீர்
  உங்கள் முன்னுள்ளே இன்னொரு-
  வாய்ப்பை மறந்துவிடும்!
  அழகிய புன்கையுடன் -
  எதிர்கொள்ளுங்கள்.

*******

# யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப வாழ்க்கை

வடமராட்சிப் பகுதியில் மேலைப்புலோலியை நடுநாயகமாகக் கொண்டு நாற்புறமும் நன்மையடைய இந்துச் சூழலில் பெண்பிள்ளைகளுக்கு என உயர்தரப்பாடசாலை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் 23.07.1944 இல் ஸ்தாபிக்கப்பட்டது. வட இந்துப் பெண்கள் கல்லூரியிருக்கும் வளவில் கிழக்கு மேற்காக கிடுகுக் கூரையுடன் பெரிய மண்டபம் ஒன்று அமைந்திருந்தது. திரு.மு.கார்த்திகேசு அவர்களின் அயரா முயற்சியில் அவரது இல்லத்திலேயே ஆனி மாத அனுஷ நட்சத்திரத்தில் வைத்திய கலாநிதி சபாபதிஐயர் அவர்களால் 46 மாணவர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 11 பேர் கொண்ட சைவவித்யா விருத்திச்சபையினரால் பாடசாலை நிர்வாகிக்கப்பட்டது. 1945 இல் தற்போதைய காணிக்கு மாற்றப்பட்டு O/L வரை கற்கும் 369 மாணவர்களுடன் 01.10.1976 இல் அரச உதவி பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. "உன்னை அறி" என்ற மகுடவாசகத்துடன் இன்றும் பட்டொளி வீசிப்பறக்கிறது. பாடசாலைக் கொடி. இந்துக் கலாச்சாரத்தை கட்டியெழுப்பத் தோள் கொடுத்த பெற்றோர்களும், பெரியார்களும் அல்லும்பகலும் அதே சிந்தனையில் உழைத்தனர். காணிகளை இனாமாக இணைத்தனர். நன்கொடைகளை அள்ளி வழங்கினர். திரு.எஸ்.எஸ்.சரவணமுத்து அவர்களால் 1944 இல் அடிக்கல் நாட்டப்பட்ட பிரார்த்தனை மண்டபம் 1954 இல் திறந்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் மிஷனரிப் பாடசாலைகளுடன் போட்டிபோட்டு மாணவர்களை வீடுவீடாகச் சேர்க்க வேண்டிய நிலை இருந்த போதும் 1950 களின் பின்னர் தொகை மளமளவென உயர்ந்தது. 1947 இல் 483 ஆக இருந்தது. 1951 இல் 1238 ஆகவும் 1952 இல் 1375 ஆகவும் மாணவர் தொகை அதிகரித்தது. பெற்றோர்களின் நம்பிக்கையால் வளர்ந்தது.

தன்னலமற்ற தியாக சிந்தனையுடன் சேவையாற்றும் அதிபர்களும் வாய்த்தனர். முதலாவதாக திருமதி.மீனாட்சி பொன்னுத்துரை 1945 இல் அதிபரானார். 1946 இல் இந்திய மாது அறவாழ்வும் ஆங்கில அறிவும் கொண்ட செல்வி.பசுபதி ஐயர் அதிபரானார். 1947 இல் அதிபரான திருமதி. யோ.கனகசபை கடமை, கண்ணியம், கட்டப்பாடு மிக்கவர். நீளப்பாவாடை, சட்டை, தாவணி என்பதான சீருடையில் பெண் மாணவிகள் பொலிவுடன் விளங்கினர். சிறுதுளி பெருவெள்ளமெனப் பௌதீக வளங்களும் பெருகின. திரு.எஸ்.இரத்தினசிங்கம், டாக்டர் எஸ்.சுப்பிரமணியம், திரு.வி.கே.சிவப்பிரகாசம்,



திருமதி.நல்லையா போன்றோரின் முயற்சியால் வகுப்பறைக் கட்டடங்கள் உருவானது. இரசாயனவியல் ஆய்வுகூடம் திரு.சபாபதி அவர்களால் அத்திவாரமிடப்பட்டு மகனால் பூர்த்தியாக்கப்பட்டது. மலேயன் பென்சன் எடுக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் தாவரவியல், பௌதீகவியல் ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டது.

1954 இல் பல்கலைத் தேர்வில் கலைப்பிரிவிற்கு பார்வதி கந்தையா ஆங்கிலக்கல்வி மூலம் தெரிவு செய்யப்பட்டார். 1957 இல் திரு.பொன்னையா அவர்களினால் 60 படுக்கை வசதி கொண்ட விடுதி அமைக்கப்பட்டது. திறமையான மாணவர் வருகை, பல்துறை ஆற்றல் மிக்க ஆசிரியர் சேர்க்கை ஆகியவற்றிற்கு வாய்ப்பு கிடைத்தது. இவற்றால் 1957 இல் எமது பாடசாலை $1^A$, $1^B$ முதலாம் தர பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. இந்த வியத்தகு வளர்ச்சிக்குகாரணமான அதிபர் செல்வி சரவணமுத்துவின் காலம் பொற்காலமாகும்.

1960 களில் அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்ற சமயம் அரசுக்கும் பரிபாலன சபைக்கும் ஏற்பட்ட இழுபறிநிலை ஒரு தளர்வை ஏற்படுத்தியது. எனினும் உறுதியான அத்திவாரம் என்பதால் பாடசாலை நிலை குலையவில்லை. 1966 - 1967 இல் காயத்திரி கணேசன் அதிபரானார். நடராஜப் பெருமானின் திருவுருவம் அமைக்கப்பட்டு இறை அஞ்சலி, சமய ஆராதனை முதலான சைவ தமிழ்க்கலாச்சாரம் வளர்ந்தது. 1969 - 1970 இல் மீண்டும் செல்வி.சரவணமுத்து அதிபரானார். 1971 - 1983 இல் திருமதி.பூபதி கனகசுந்தரம் காலத்தில் பல துறையிலும் மாணவர் முன்னேற்றம் கண்டனர். பாடசாலை வலைப்பந்தாட்டக்குழு 1977 இல் அகில இலங்கைச் சம்பியனாகியது. 1983 - 1990 இல் திருமதி.சிவனேஸ்வரி சுப்பிரமணியம் குழப்பமான நாட்டுச் சூழலில் மாணவர் கல்வியை தளம்ப விடாது கட்டிக்காத்தார். 1987 இல் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை எம் பாடசாலையின் ஒரு பகுதியாக இயங்கியது. 1995 பெப்ரவரியில் பொன்விழா எடுக்கப்பட்டு அதில் வெளியிடப்பட்ட பொன்விழா மலர் எமது பாடசாலை வரலாற்றுக்குத் தக்கதோர் சான்றாகியது.

வகுப்பறைக் கட்டிடங்கள் பிரத்தியேக கணனி அறை, கணனிக் கல்விஅறை என்பனவாக மாற்றப்பட்டுள்ளன. நூலகம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இவற்றால் மாணவர்கள் நவீன கல்வி முறைக்கான நுட்பங்களை அறிய வாய்ப்பு கிடைத்தது. வட இந்து மகளிர் கல்லூரியின் பிறப்பிடமும், சைவ மக்களின் வழிப்பின் சின்னமே ஆகும். அர்த்தமுள்ள இந்து மதத்தின் இனிய தத்துவங்கள் அனைத்தையுமே தனது உரிய கருத்துக்களாகக் கொண்டு வாழ்வியல் நடைமுறைக்கு ஏற்ப கலாச்சார விழுமியங்கள் சற்றும் தளராத வகையில் பலமங்கையர் திலகங்களை மாசில்லா மாணிக்கங்களை உருவாக்கிய பூமியாகத் திகழ்ந்தது. வட இந்துத் தாய்க்கென்று ஒரு பாரம்பரியம் உண்டு. அங்கு நடக்கின்ற கலை நிகழ்ச்சிகளுக்கும் ஒரு கௌரவமிக்க பரிமாணம் உண்டு. அங்கு எழுகின்ற சலங்கை ஒலியும் ஏழிசை இராகத்துடன் கூடிய ஞானம் மிக்க இசையும் என்றும் எங்கும் ஒலிக்க வேண்டும். எமது இதயங்களிலும் அந்த இன்னிசை ராகங்கள் நிலைக்க வேண்டும்.

இந்த இதழில் ஒரு பிரபல்யம் மிக்க பாடசாலையை பார்வையிட்டோம். அடுத்த இதழில் ஒரு பிரபல்யமான பாடசாலையைப் பற்றி நீங்கள் எதிர்பார்த்தவாறே இருங்கள்.

இ.விதுர்ஷா
ஊடகவியல் மாணவி

*"முயற்சி என்பது மூலதனம்*
*முடியாது என்பது முட்டாள் தனம்"*


*"முட்களில் மோதிக்கிளியாதவனுக்கு*
*பூக்களைத் தொடும் தகுதி கிடையாது!"*

# தமிழ் தேசியத்தை கொல்லாதீர்கள்



இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதிக்கு பின்னர் தமிழர்களின் இனப்பிரச்சினை ஒரு தீராத பிரச்சினையாக இருந்து வருகின்றது. தமிழர்களின் உரிமை இன்று வரை கிடைக்கவில்லை. தந்தை செல்வா அவர்களால் ஜனநாயகத்திற்காக தொடங்கப்பட்ட அறவழிப் போராட்டம் மூலம் தமிழர்களது உரிமைப் போராட்டம் அது சாத்தியமற்று போனது. பின் ஆயுதப் போராட்டமாக மாறி தமிழர்களது பிரச்சனை சர்வதேசத்தின் பார்வைக்குள் சென்றது. இது தமிழர்களுக்கு கிடைத்த ஒரு வெற்றியாக பார்த்தால் கூட அது கூட இன்று தமிழர்களுக்கான தீர்வை பெற்றுத்தர முடியாத ஒரு சூழ்நிலையே காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த காலப்பகுதியில் இருந்து எத்தனை அரசுகள் மாறி மாறி வந்த போதும் தமிழர்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் எல்லாருமே அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வந்துள்ளனர். இதனால் தான் இலங்கையின் சுதந்திர தினத்தையும் தமிழர்கள், தமிழ்த் தலைவர்கள் புறக்கணித்து வருகின்றனர்.





இப்பொழுது சிறுபான்மை இனமாகிய தமிழ் பேசும் மக்களால் ஆட்சிப்பீடம் ஏறிய மைத்திரி அரசாங்கமும் இன்றுவரை தமிழர்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக எதுவுமே செய்யவில்லை. ஆனால் இலங்கையின் 67வது சுதந்திர தின விழாவில் கூட்டமைப்பின் தலைவர்கள் சம்மந்தன், சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். இதற்குக் கூட்டமைப்பில் உள்ள மாவை சேனாதிராஜா, சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோர் எதிர்ப்பினையும் தெரிவித்திருந்தனர். கூட்டமைப்பு என்பது தமிழ் தேசிய கொள்கையுடைய ஒரு கட்சி ஆகும்.

கூட்டமைப்பில் இருப்பவர்களுக்கு உள்ளேயே பல்வேறு கருத்துக்களையும், முடிவுகளையும் எடுப்பது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சங்கடமான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. சுதந்திர தினத்தில் சம்மந்தன், சுமத்திரன் பங்குபற்றியது நாட்டில் எல்லோரும் பிரச்சினை இல்லாமல் சுமூகமாக வாழுகின்ற ஒரு நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால் தமிழர்களின் நிலையை ஒரு தரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூட்டமைப்பில் உள்ள தலைவர் சம்மந்தனும், சுமந்திரனும் சகல விடயங்களிலும் கூட்டமைப்பில் உள்ள எல்லா கட்சிகளுடனும் கலந்தாலோசித்து முடிவு எடுப்பவர்கள். இந்த விடயத்தில் ஏன் தனிப்பட்ட முடிவு எடுக்க வேண்டும். இன்று தமிழ் மக்கள் தேசிய கொள்கைக்காகவே கூட்டமைப்புக்கு

வாக்களித்து வருகின்றார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கட்சிக்கென்று வாக்களிக்கவில்லை. கூட்டமைப்பு என்ற சொல்லுக்கே வாக்களிக்கின்றார்கள். ஜனாபதி தேர்தலின் போது வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் அவர்கள் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பு செய்ய வேண்டும் என்று கூறிய போது அது அவரின் தனிப்பட்ட கருத்து அது கூட்டமைப்பின் கருத்தல்ல. அவருக்குக் கட்சி ரீதியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கூறி கட்சி உறுப்புரிமையை இடை நிறுத்தியவர்கள் இன்று இவர்கள் யாரிடம் ஆலோசனை பெற்று சுதந்திர தினத்தில் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு யார் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது அப்படியானால் சம்மந்தனும், சுமந்திரனும் மக்களுக்கு ஒரு விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும். இது கூட்டமைப்பின் முடிவு அல்ல இருவரினது தனிப்பட்ட முடிவு, என்று தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் நாங்கள் என கூறிக் கொண்டு தமிழ் தேசத்துக்காய் வாக்களித்த மக்களின் மனங்களை நிலைகுலையச் செய்யாமல் சரியான வழியில் பயணிக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.

சி. நவீந்திரா
ஊடகவியல் மாணவன்

## கட்டுரைப் போட்டி

மாணவர்களின் எழுத்தாற்றலையும் திறமையினையும் வெளிப்படுத்தும் நோக்குடன் யாழ் முழக்கம் சஞ்சிகை கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. போட்டியில் மாணவர்கள் அனைவரும் பங்கு பற்ற முடியும்.

பின்வரும் தலைப்பை தேர்வு செய்து 200 சொற்களிற்கு குறையாமல் 02-04-2015 ற்கு முன்னர் தங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.


*போட்டித் தலைப்பு :-*

**மாணவர்களை நெறிப்படுத்துவது**
**பாடசாலையா? தனியார் கல்வி நிறுவனமா?**

அனுப்ப வேண்டிய முகவரி : யாழ் முழக்கம்
கட்டுரைப் போட்டி
பிரதம ஆசிரியர்
வே.தவச்செலவம்
தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.

- *தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.*
- *சிந்திக்காதவன் முட்டாள்*
  *சிந்திக்கத் துணியாதவன் கோழை*
  *சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்*

# இடப்பெயர்வுகளும் வரலாறும் (சிங்கை நகர்)



யாழ்ப்பாண மாவட்டத்தின் பூர்வீக வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களாக வல்லிபுரம், நாகர்கோயில், கந்தரோடை, மணிபல்லவம், மாவிட்டபுரம், கீரிமலை, தொண்டமானாறு முதலியவற்றை குறிப்பிடலாம். இந்த வரலாற்றுப் பழமை வாய்ந்த இடப்பெயர்களை ஆராய்வதன் மூலம் வரலாற்று உண்மைகள் மேலும் துலக்கம் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் இந்த இடங்களிற் கண்டு எடுக்கப்பட்ட நாணயங்களும் இடப்பெயர்வு ஆய்வுக்குத் துணைபுரிகின்றன.

இவ் ஆய்வில் யாழ்ப்பாண மாவட்டத்துச் சாசனங்களில் உள்ள இடப்பெயரில் "சிங்கை நகர்" என்பதை நோக்குவோமேயானால், பருத்தித்துறையில் இருந்து சுண்டிக்குளம் வரை பரந்து இருக்கும் வெண்மணற் திடரில் கலிங்க ஆரியர் வந்து இறங்கிய பின்னர் லிங்கபுரம் என்ற கலிங்கத்துப் பெயரை "சிங்கை நகர்" என வல்லிபுரம் பகுதிக்கு இட்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் சிங்கை நகரை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். இதனால் தான் இம்மன்னர்கள் "சிங்கை நகர ஆட்சியாளர்கள்" என்று வர்ணிக்கப்படுவதுடன் "சிங்கையெங்கோமான்" சிங்கை ஆரியர், சிங்கை தங்கும் ஆரியர் கோமான்" போன்ற வீருதுப் பெயர்கள் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. மேலும் சிங்கை என்ற பெயர் வட இலங்கை அரசுக்கும் அதன் தலைநகருக்கும் உரித்தாகியதனால் இதனை "செயம் பெறும் சிங்கை நாடான செகராச சேகரன்" என அழைக்கப்பட்டதனை செகராச சேகரத்தின் தொடர் (செய்யுள்-9) சான்று படுத்துகின்றது. இச்சிங்கை நகர் வல்லிபுரமா? அல்லது யாழ்ப்பாணா? அல்லது நல்லூரா? என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.


பறங்கிக்காரர் கி.பி 1590 இல் கொழும்புத் துறையில் இறங்கி நல்லூரை தாக்கிய போது சிங்கை நகரம் என்னும் பெயரோடு ஓர் அரண் இருந்ததாக குவேறொஸ் குறிப்பிட்டுள்ளார். மேலும் செகராச சேகரமாலை, செகராச சேகரம், தட்சிண கைலாய புராணம் என்பனவற்றில் வட இலங்கை இராச்சித்தின் தலைநகர் "சிங்கை" அல்லது "சிங்கை நகர்" என குறிப்பிட்டுள்ளன. ஆனால் பின்னர் தோன்றிய யாழ்ப்பாண வைபவ மாலை கைலாயமாலை ஆகிய நூல்கள் வட இலங்கை மன்னர்களாகிய ஆரியச் சக்கரவர்த்திகளின் தலைநகர் நல்லூர் என குறிப்பிட்டுள்ளன. எனவே ஆரியச் சக்கரவர்த்திகளின் முதலாவது தலைநகர் "சிங்கை" என்பதும் அதன் அழிவின் பின்னர் நல்லூர் தலைநகரமாயிற்று என்பதை அறிய முடிகின்றது.

மேலும் முதலியார் செ.இராசநாயகம் சிங்கை நகர் என்பது வல்லிபுரம் என குறிப்பிட்டுள்ளார். இதற்கு சான்றாக கேகாலை மாவட்டத்துக் கொட்டேகம என்ற இடத்திற் பொறிக்கப்பட்டிருந்த தமிழ்க் கல்வெட்டில் வரும் "பொங்கொலி நீர்ச் சிங்கை நகர் ....." என்ற தொடரைச் சான்றாக காட்டினார். "பொங்கொலி நீர்ச் சிங்கை நகர்" எனபது வல்லிபுரமே என சுவாமி ஞாணப்பிரகாசர் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் நல்லூருக்கண்மையில் நாயன்மார் கட்டு அரசடி விநாயகர் கோயிற்குள் புனருத்தாரணத்தின் போது 1942 இல் கல்வெட்டு அகப்பட்டது. இது சிங்கை நகர் ஆரியச் சக்கரவர்த்தி பற்றிய குறிப்புள்ளது. இக்கல்வெட்டு பற்றி பேராசிரியர் இந்திரபாலா கருத்து தெரிவிக்கும் போது "இக் கல்வெட்டு கலி 3025 இல் நடைபெற்ற ஒரு

சம்பவத்தை குறிப்பிடுகிறது. கலி 3025 என்பது கி.மு 76ம் ஆண்டளவாகும். சாசனத்தின் எழுத்தோ கி.பி 14ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கூற முடியாது எனக் கூறியுள்ளார்.

சிங்கை நகருக்கும் வைஷ்ணவ நரசிங்க மூர்த்தி வழிபாட்டிற்கும். நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். சைவநாயன்மார்கள் இராவணன் கதையையும, வைஷ்ணவ ஆழ்வார்கள் நரசிங்கமூர்த்தி அவதாரக் கதையையும் தம் எதிரிகளுக்குப் பயமூட்டும் வகையில் பயன்படுத்திய காரணத்தால் நரசிங்க மூர்த்தி கோயில்கள் தோற்றம் பெற்றிருக்கலாம். இந்தக் காலகட்டத்தில் வல்லிபுரத்தில் நரசிங்க அவதாரம் கொண்ட திருமாலுக்கு கோயில் கட்டப்பட்டு கோயிலறை தெய்வ மூர்த்தியின் பெயரால் சிங்கை நகர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

மேலும் சுவாமி ஞானப்பிரகாசர் சிங்கை நகர் பற்றிக் கூறும் போது கிழக்கு கலிங்க தேசத்துக் கங்வம்சத்தைச் சேர்ந்த உக்கிரசிங்கனின் பரம்பரையினரே சிங்கைநகரைச் ஸ்தாபித்து ஆட்சி மேற்கொண்டனர் என்றார். இது பற்றி பேராசிரியர் வேலுப்பிள்ளை கூறிய கருத்தை நோக்கும் போது கலிங்க நாட்டின் பழைய தலைநகரம் ஒன்றின் பெயர் "சிங்கபுரம்" ஆகும். இது திருமால் நரசிங்க அவதாரம் கொண்ட இடம் என்று நம்பப்படுகின்றது.



தொண்டை மண்டலத்தில் உள்ள இன்னொரு பெரிய வைணவத் தலம் சோழசிங்கபுரம் என்ற இடம் மருவிச் 'சோழங்கிபுரம்' என்று வழங்குகின்றது. பல்லவர் காலத்திலே இலங்கையிலே சிங்கை நகர் குறிப்பிடப்படுவதால் அக் காலத்தில் வல்லிபுரப் பகுதியிலே நரசிங்க மூர்த்தி தாபிக்கப்பட்டிருக்க வேண்டும். என்றும் அம்மூர்த்தியின் பெயராலேயே ஊர்ப்பெயர் "சிங்கை நகரென்று மாறிற்று" என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையான ஆய்வாளர்களின் கருத்துப்படி சிங்கை நகர் நல்லூர் அல்ல வல்லிபுரம் என்பதே முடிவாகும்.

ர.தினுஷா
கலைமாணி (தொல்லியற் துறை)
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



# தமிழ் இலக்கியங்கள் புகழப்படுவது ஏன்?

நாம் எத்தனையோ எண்ணற்ற இலக்கிய நூல்கள் வாசிக்கின்றோம். இரசிக்கின்றோம். இவை எல்லாம் ஏன் எழுதப்பட்டன என்று சிந்திக்கின்றோமோ? இலக்கியம் சங்ககாலம் முதல் சமகாலம் வரை வரையப்பட்டு வந்துள்ளன. அகத்திணை இலக்கியங்கள், புறத்திணை இலக்கியங்கள், அறநூல்கள், பக்தி பாடல்கள், சிற்றிலக்கியங்கள், காவியங்கள் என இலக்கிய நூல்களை தமிழ் வளர்த்த அறிஞர்கள் பாகுபாடுசெய்துள்ளனர். இலக்கியங்கள் எமது பண்பாட்டை பிரதிபலிக்கும். உரைக் கற்கள் மட்டுமா? இல்லை பல வாழ்க்கை உண்மைகளையே எமக்கு எடுத்துக் காட்டும் நற்சாதனங்களாகவும் விளங்குகின்றன.

இலக்கியங்கள் போதிக்கும் உண்மைகளை ஒவ்வொன்றாக அவதானிப் போமானால் ஒழுக்கநெறியை மக்களுக்குப் புகட்டுவதில் இவை பெரும் பங்காற்றுகின்றன. திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி போன்றவை மனிதன் எவ்வழியில் வாழவேண்டும் எவ் வழியைத் தவிர்க்கவேண்டும் என்ற வழிகாட்டிகளாகவுள்ளன. இன்றைய உலகம் இவற்றை கற்பதை கைவிட்டு விலகிச் செல்வது கவலைக்குரிய ஒன்றாகும். சங்கமருவியகால அறநூல்கள் அனைத்தும் தவறான வழியில் சென்ற மனிதனை தலை நிமிர்ந்து நிற்க எழுந்த இலக்கியங்கள் என்பதை எவரும் ஏற்பர்.

அடுத்து பக்தி இலக்கியங்கள் மேல் சற்று கண்ணோட்டம் செலுத்துவோமானால் ஆழ்வார்களும், நாயன்மார்களும் உலகம் நிலையற்ற உண்மையான பொருள் இறைவன்அவனை அடைவதே மனிதனின் கடமை என்ற உண்மைகளை தேவாரம், திருவாசகம் போன்ற இலக்கிய வடிவில் மக்களுக்கு புகட்டியுள்ளனர். சித்தாந்த தத்துவங்களை இவை அளிக்கின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிகளின் பணிகளை மிக அழகாக இவை எடுத்துகாட்டுகின்றன. பல்லவர் கால பக்தி பாடல்கள் மனித வாழ்க்கைக்கு தேவையான இலக்கியங்களே என்பதனை எந்த ஞானியும் ஏற்றுக் கொள்வர் பல்லவர் கால இலக்கியப் பண்புகளில் ஒன்று தமிழுக்கு முதன்மை அழித்துப் பாடுவதாகும்.

சம்பந்தர் தமிழ்வரகன், தமிழ் ஞானசம்பந்தன், நற்றமிழ் வல்லஞான சம்பந்தன் என்றும் பூதத்தாழ்வார் "ஞானத்திழ் புரிந்தான்" என்றும், அப்பர் "தமிழோடு இசைப்பாடல் மறதறியேன்" என்றும் தமிழ் மொழியை தெய்வீக மொழியாக்கி முதன்மைப்படுத்த வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி இருந்ததையும் அவதானித்திருக்கலாம்.

அடுத்து காவியங்களைச் சற்றுக் கவனிப்போமானால் சிறிய உண்மைகளை கதை மூலம் கல்வியறிவற்ற மக்களுக்கு அவற்றை புரியவைப்பதற்காக ஆயிரக்கணக்கான செய்யுள் வடிவில் அமைத்துதந்துள்ளன. உதாரணமாக அரிச்சந்திர காவியத்தை எடுத்து நோக்கில் உண்மை பேசுதல் வேண்டும். இதனை எந்நிலையிலும் விலக்கக் கூடாது என்ற உட்பொருளை மக்களும் பயிலுவதற்காக எழுதப்பட்டதே இதன் அடிப்படைத் தத்துவமாகும். எனவே 05ம் பெரும் காவியங்களும் கம்பராமாயணம், பாரதம் போன்ற நூல்களும் இந்த வழியில் வந்த இலக்கியங்களாகும்.

அடுத்து சிற்றிலக்கியங்களை அவதானிப்போமானால் ஒவ்வோர் அனுபவங்ளையும் எடுத்துக்காட்டி அனுபவ வழியில் நடக்க இவை உதவுகின்றன. உதாரணமாக ஜெயகாந்தன், மு.க.கருணாநிதி. அண்ணாத்துரை, புதுமைப்பித்தன் போன்றோரின் கதைகள் தோறும் மூடநம்பிக்கைகள் தகர்த்தப்படுவதையும், வாழ்க்கையில் மனிதன் பிறரை பின்பற்ற வேண்டுமென்ற சிந்தனையையும் அவை ஊட்டுகின்றன.

எனவே இலக்கியங்கள் அறிவைத் தருகின்ற வழியைக் காட்டுகின்றன, முழு மனிதனாக ஆக்குகின்றன. மற்றவர் முன் மதிப்பைத் தருகின்றன. சரியானது எது? தவறானது எது? எனக் கண்டறிய வைக்கின்றன. கல்வி என்ற கடலில் முன்னோக்கி நீந்த இளமையில் மட்டுமல்ல எப்பருவத்திலும் நமக்கு உதவுகின்றன எனலாம்.

*இ.விதுர்ஷா*

*ஊடகவியல் மாணவி*

# மேரி அன்னி



இங்கிலாந்து நாட்டில் 1799ம் ஆண்டு பிறந்தவர் மேரி அன்னி கடற்கரை நகரமாக லைமிரெஜிங் என்ற இடத்தில் இவர் பிறந்தார். வறுமை காரணமாக இவர் பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்க முடியவில்லை. இருப்பினும் புத்தகங்கள் மூலம் தனது அறிவை வளர்த்துக் கொண்டார். தந்தையின் வழியில் இவர் கடற்கரை மணல் மற்றும் பாறைப்பகுதியில் புதைந்திருக்கும் விலங்குகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் புதைவடிவங்களை சேகரித்து ஆய்வு செய்தார்.

இதன் மூலம் இயற்கை மாறுபாடுகளால் அழிந்து போன பல்வேறு உயிரினங்களை இவர் கண்டுபிடித்தார். இவர் 11 வயதாக இருக்கும் போது தனது சகோதரனுடன் சேர்ந்து பெலிசியோசாரஸ் என்ற பழங்கால கடல்வாழ் உயிரினம் ஒன்றின் புதை வடிவத்தை கண்டுபிடித்தார். பூமியில் வாழ்ந்த டயனோசர்ஸ் போல கடலில் வாழ்ந்த ஒருவகை உயிரினம் இது போல பல்வேறு ஆபூர்வ கடல்வாழ் உயிரினங்களின் புதைபடிவங்களை கண்டு பிடித்து உலகுக்கு அறிவித்தார்.

இவரது கண்டுபிடிப்புக்கள் உலகில் உள்ள மற்ற விஞ்ஞானிகளின் கவனத்தை கவர்ந்தது. பெண்களுக்கு சம உரிமை இல்லாத அந்த காலகட்டத்தில் இவரது ஆய்வுகளை ஆண் சமூகம் அங்கீகரித்து அவரை கௌரவித்தது. இவரது பல்வேறு கண்டுபிடிப்புக்கள் மூலம் சரித்திரகாலத்தில் வாழ்ந்த கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய பல அபூர்வ தகவல்கள் கிடைத்தன.

*ம.நிதர்சனா*
*ஊடகவியல் மாணவி*












## முச்சந்தியில்.............



நாட்டின் முன்னாள் அதிபரிற்கு இரவில் தூக்கம் வருவதில்லையாம்

இதற்கு பிரதான காரணம் பதவி பறி போனது என்று நினைக்காதைங்கோ மனுஷன் வன்னியிலை எடுத்த தங்க நகைகளை எங்கே மறைத்து வைப்பது என்பதே பிரதான யோசனையாம்.

புதிய அரசாங்கம் கண்டு பிடித்துவிட்டால் சிக்கலல்லோ அதுதான் மனுஷன் யோசிக்கிறாராம்.

---

தொண்டு நிறுவனங்கள் என்றால் எல்லாம் தொண்டு நிறுவனங்களோ அல்லது வலிந்து உதவும் அமைப்புகளோ என்று எண்ணி விடாதீர்கள்.

வடமராட்சியில் வெள்ளை உடை தரித்த மதகுரு ஒருவரால் நடத்தப்படும் தொண்டு நிறுவனத்தில் மாணவர்களிற்கு உணவு வசதி கல்வி வசதி என்று பல சலுகைளை பாவம் இந்த வெள்ளை உடை தரித்த மனுஷன் செய்து வாறார்.

ஆனால்

இந்த மதகுருவிற்கு வசதி குறைந்த மெல்லக் கற்கும் மாணவர்களை கண்ணில காட்டக் கூடாதாம் படிக்கக்கூடிய பிள்ளையளை தான் நாங்கள் படிப்பிப்போம் என்று அடம்பிடிக்கிறாராம்

இதாலை பாதிக்கபட்ட பிள்ளைகளின் பெற்றோர் கேட்கிறார்கள் பிள்ளைக்கு எல்லாம் தெரிந்தால் ஏன் ஐயா படிக்கவிடப்போறம் நீங்கள் கருணை உள்ளம் கொண்டவரா அல்லது உங்களிற்கு ஏழைகளிற்காக இரங்குவதற்கு இதயமே இல்லையா? என்று கேட்கிறார்கள்

இதற்கு இன்னொருவர் சொன்னாராம் சிலவேளை செயற்கை இதயமோ தெரியாது உதைப்பற்றி யோசித்து பிறகு உளத்தாக்கம் அடைந்தாலும் சிலவேளைகளிலை அதுக்கும் தாக்கம் இல்லாதவர்களிற்கு தான் உளவளம் என்றால் கரச்சலாய் போகும் பாருங்கோ

---

இலங்கையின் சுதந்திர தினத்திலை கலந்து கொண்டதற்கு சீற்றமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சம்பந்தன் ஐயாவையும் சுமந்திரனையும் கடுமையாக திட்டிக்கொண்டு திரியிறாராம்

இப்படி ஒருநாள் திட்டிக் கொண்டு போகேக்கை பக்கத்திலை இருந்த மனுஷன் தன்ர குருகுருத்த வாயால உப்படி திட்டினால் இந்தமுறை சீற் கிடைக்குமா? எண்டு கேட்டதற்கு இப்படி திட்டினால் தான் சனம் எனக்கு வோட்போடும் நான் தம்பிக்கு அமைச்சுப் பதவிக்கு சண்டை பிடிச்சதாலை சனம் குழம்பிப்போய் நிக்குதுகள்

அதுக்காகத்தான் இப்படிஅறிக்கை விடுகிறனான் இது எல்லாருக்கம் தெரியும் அரசியல்லை இதெல்லாம் சகஜம் அப்பா? அப்படி சீற் தராட்டில் புது ஓட்டம் ஓடலாம்! அவையள் அப்படி செய்ய மாட்டினம் ஏன் என்றால் 1987ம் ஆண்டு விளையாட்டு அவைக்கு எல்லோருக்கும் தெரியும் எத்தினை தலையளை அப்ப பாத்தனான் உந்த பழுத்த தலையள் எல்லாம் ஒரு சின்னப் பிரச்சனை எண்டவுடன் கூட வந்தவர் வாய் மௌனமாகி விட்டதாம்.

யாழ் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத்துறையில பல தில்லுமுல்லுகள் நடக்குதாம்

முன்னைய ஆட்சியாளர்களும் இதற்கு பக்கபலமாக இருந்திருக்கினம்

அதுசரி மருதங்கேணியிலை உள்ள ஒரு கூட்டுறவுத் துறையிலை 92 லட்சம் ரூபாவிற்கு மேலை மோசடி நடந்தது அதை பொதுச்சபை கண்டு பிடித்து விசாரணைக்கும் வேண்டுகோள் விடுத்தது

கூட்டுறவு ஆணையாளரால் சாட்டுக்கு விசாரணை வையுங்கோ எண்டவராம்.

இதிலை பகுடி என்னண்டா

மோசடிக்காரனை விசாரணை செய்வதற்கு மோசடிக்காரருக்கே உத்தரவிட்டராம் ஆணையாளர் ஆனால் விசாரணைகள் எதுவுமே நடக்கவில்லையாம் இதிலை மேல் இடத்திற்கும் ஏதும் சம்திங் இருக்குமோ எண்டு மக்கள் சந்தேகப்படுகினம்.

த.நெருப்பன்

## பொது அறிவு

1. இலங்கையின் பழைய பெயர் : இலங்காபுரி
2. தேசிய காங்கிரசை நிறுவியவர் : சேர்.பொன்.அருணாசலம்
3. சிங்கள மொழியின் தோற்றக்காலம் : 1000 வருடங்கள்
4. ஆற்றிடைக்குறை என்பது : இலங்கை
5. இலங்கைப் படத்தை முதலில் வரைந்தவர் : தொலமி
6. இலங்கை எப்போது குடியேற்ற நாடாக்கப்பட்டது : 1802 இல்
7. 21 வயதினர்க்கு வாக்குரிமை வழங்கப்பட்டது : 1931 இல்
8. இலங்கையின் வரலாற்றுத் தொடர்பான நூல் எழுதியவர் : றோபட் நொக்ஸ்
9. பாராளுமன்ற ஆணையாளரைக் குறிக்கும் சொல் : ஓம்புட்ஸ்மன் (தனி ஆணையாளர்)
10. சுதந்திர இலங்கையின் முதல் தேசாதிபதி : சோல்பரிப்பிரபு
11. இலங்கையின் முதல் அரசியல் சட்டம் யாரால் எழுதப்பட்டது : சேர். ஐவர் ஜெனிங்ஸ்
12. இலங்கையின் வடபிரதேசம் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றெடுத்த பெயர் : நாகதீவு

## அடுத்த இதழில் எதிர்பாருங்கள்....

5ம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களை பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற வைக்கும் நோக்குடன் பிரபல ஆசிரியர்களின் வினாவிடைத் தொகுப்பும் - போட்டிகளும்.

*பிரதிக்கு முந்துங்கள்*

# கவிதை முழக்கம்

## மதியுங்கள்

மனிதன் மருங்கில்
மருண்ட மொழித்திடலை
என் மடல் கொண்டு
மடை திறக்கின்றேன்

புதுக்கவிதை
புனைய புலன் மீது
ஆசை கவ்வி
குரல் கொண்டு வெம்பாது
பேனை கொண்டு புலம்புகின்றேன்.

கேளுங்கள் புலம்பலை
வாசியுங்கள் புதைந்ததை
பதியுங்கள் மனத்திடலில்
விரும்பினால் மதியுங்கள் எனது
சிறு கவிதையை .........!

பிரியா
வடஇந்து மகளிர் கல்லூரி
ஆசிரியர்

### குட்டிச்சுவர்

அழகிய வண்ண
ஆடைகளால்
அலங்கரிக்கப்பட்ட
ஆடம்பரமாயிருந்தேன்
அன்று தேர்தல் காலம் ...!
ஆடை கிழிந்து
அலங்கோலமாய்
அரை நிர்வானத்திலிருக்கிறேன்
இன்று ஆட்சிக்காலம்.



## நான் ரசித்த இயற்கை..

இளங்காலை பொழு தொன்றில்
இயற்கை யோடு கலந்திருந்தேன்

மெட்டான மலரொன்று சட்டென
அழகாக விரியக் கண்டேன்!

முத்தான பனித் துளி புல்நுனி வீட்டு
பட்டென சிதறக் கண்டேன்!

தென்றலோடு மூங்கிலில் உருவான புது
இசையைக் கண்டேன்!

தவழ்கின்ற நதியில்
தாயின் அன்புத் தாலாட்டைக் கேட்டேன்!

கொஞ்சிடும் கிளிகளின் உருவில் உண்மை
காதலை கண்டேன்!

மோதிடும் வண்டின் வடிவில் இதமான
காமத்தை கண்டேன்!

விலகி வழி விடும்
வெண் மேகமும் கண்டேன்!

நாணி மறைந்த நிலவை கண்டேன்!
இயற்கை அழகான இன்பத்திலே
என்னை மறந்து நின்றேன்
இத்தனை அழகான படைப்பில்
இறைவனை வியந்தேன்!
இல்லை உன் தமிழால் இது சிறிது என
இறைவன் வியந்தான் !!!
இயற்கை அழகு

போ.கிருசாந்தினி
உடகவியல் மாணவி

## என் காதல் தேசமே!

என் காதல் தேசமே!
உன்னைக் கருக்கிய கயவரை
எரிக்க எழுந்தது ஞாயிறு

எழுந்த ஞாயிறு
ஒளி கொடுத்தது
சுட்டெரித்தது

சூரிய ஆலல்
ஆயிரம் விழுதுகள்
பரந்து விரிந்தன.

சூரிய வரவால்
போரியல் கண்டது
வரலாறொன்று உதயமானது
தரலாமென்று உலகமே சாய்ந்தது.

என் காதல் தேசமே
கண்ணீரல்ல உன் வரலாறு
நன்றாம் ஒன்றுளது வெல்வாய்.

பரா.றதீஸ்

## காற்றில் கலந்தவன்...

நேற்றுவரை என்னோடு நிழலாக நீ
நெஞ்சத்தை தொட்டவள் நீ
கனவில் மட்டுமல்ல
நிஜத்தில் கூட நிழலாக என்னோடு நீ
உன் கருவிழிகள் என்னை
தொட்ட போதும் என்
மனவெளிகள் புரியவில்லை ஆனால் நீ
நேற்று வரை என்னோடு
நிழலாக வந்துவிட்டு
இன்று காற்றில் கலந்துவிட்டாய்
உன் உயிர் பிரிந்து காற்றில் நினைவோடு
கலந்தாலும் என்றும் என்னோடு நீ.

த.தர்சா




CHITHAMPARAPILLAI
BOOK DEPOT
CBD
NO :- 60, 64
MAIN STREET,
NELLIADY.
Tel - 0212263223
Fax - 0212264155
E-mail - sivamcbd@yahoo.com
Propritor
Mr.S.Sivam

MANTHIKAI MEDICAL SHOP
மந்திகை மருந்தகம்
சகல விதமான மருந்துப் பொருட்கள் மற்றும்
பால்மா வகைகள் என்பவற்றை நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
Manthikai
Tel : 0770241550, 021 2263283.

## பள்ளிக்கால ஞாபகங்கள்...

சின்னஞ்சிறு பருவம் - தன்னில்
சிறு தோள் பைகளை சுமந்தபடி
தந்தையின் கைகளைப் பிடித்து
சிறுவர்களாய் உள்நுழைந்த ஞாபகம்

பெற்றோர்களைப் போல எம்மை அரவணைத்து
ஒழுக்கத்துடன் கல்வியைப் புகட்டி
நாம் செய்த குறும்புத்தனங்களைப் பொறுத்து
பாசமுடன் கண்டித்து நல்வழிப்படுத்திய ஆசானின் ஞாபகம்

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த அனைவரும்
நட்புறவாடி ஒன்றாக சிரித்து விளையாடி
செல்லச் சண்டைகளிட்டு உணவுகளை பரிமாறி
உண்டு மகிழ்ந்த நண்பர்களின் ஞாபகம்

ஆசானிடம் பல நாட்களாக கற்ற பாடங்களை
பரீட்சை வேளைகளில் நினைவு படுத்தி
ஆசானின் கண்டிப்புக்குள்ளாகி
சோதனைகள் பல எழுதி சாதனைகள் ஞாபகம்

பள்ளிக்காலம் முடிவுறும் வேளையில்
பிரியாவிடை நிகழ்வை திட்டமிட்டு
நிகழ்ச்சிகள் பல அரங்கேற்றி
ஆசான்களின் ஆசிகளைப் பெற்று நண்பர்களை கைகுலுக்கி பிரிந்த ஞாபகம்

இன்னும் எத்தனை எத்தனை ஞாபகங்கள்
அந்தப் பள்ளிப்பருவம் தன்னிலே
பள்ளிப் பருவகால ஞாபகங்கள்
கூறிட வார்த்தைகள் போதாது.



சு. நிரஞ்சிதா
ஊடகவியல் மாணவி

### அந்த நாள் பொழுது

என்றும் இதமாக
சிட்டுக்குருவியின் சத்தம்
மாமரத்தின் கீழ் இருக்கும்
இதமான தென்றல் காற்று
சில் என்று போன
இதமான அந்தப் பொழுதுகள்
இன்றும் நினைவுகளாக.

சி.நவீந்திரா
ஊடகவியல் மாணவன்





## முள்ளிவாய்க்கால் காதலி...



தென்னந்தோப்பில் உன்
விழிகள் கதை சொல்ல
தென்னங்கிளிகள் பச்சைக் கொடிகாட்டி கதைசொல்ல?
என் மனதில் பச்சை விளக்கெரிய
என் விழிகள் விடை சொல்ல?
உன்விடை தான் முதலில்
புரியவில்லை ஆனால்,
புரிந்தபோது விடை சொல்லி?
நீ உன் முடிவை தேடிவிட்டாய்
மண்ணை காதலித்த உன்னை எனக்கு விடை சொல்ல?
நான் தேடியது என் புரியாமை தான்
ஆனால் யுத்தத்தின் சத்தங்கள்
ஓய்ந்த போது நீ விடை சொல்ல?
நான் தேடினேன் என்னை அகிலம்
எல்லாம் நீ விடை சொல்ல?
என் முள்ளிவாய்க்கால் காதலியே
வரமாட்டாயா எனக்கு விடை சொல்ல?

த. நெருப்பன்.

**யாழ்முழக்கம்** சஞ்சிகைக்கான உங்கள் விமர்சனங்களையும் பல்சுவை ஆக்கங்களையும் எதிர்பார்க்கிறோம். உங்கள் கருத்துக்கள் எங்கள் சஞ்சிகையை வளப்படுத்தும்.

தொடர்பு முகவரி : பிரதம ஆசிரியர்
வே.தவச்செல்வம் (J.P)
தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.
T.P : 0779229842
E.mail : yaalmulakkam@gmail.com

## உன் மீதான என் தேடல்

உள்ளுக்குள் இருந்து
உலகைத் தேடிய போதும்
தனிமைக் கம்பிகளை
தகர்த்துவிடு என்று
கைநீட்டி அழைத்தது
உன் அன்புக்கரம் என்பதால்
வெளியே வந்து - என்
தலைநீட்டிப் பார்க்கின்றேன்

என்னில் விழுந்த
உன் அன்புத்தூறல்களால்
உள்ளத்தில் ஏதோ
இனம் புரியாத மாற்றங்கள்

ஒட்சிசன் இல்லாது
அவதியுறும் நோயாளியாய்
நான் இருக்கையில்
நான் நடந்த தடையங்களெல்லாம்
அடித்துப் பொய்த்தது
உன் அன்பு மழை

இரு கை விரித்து
கண்மூடிக்கொண்டு
இப்பிரபஞ்சமெல்லாம் மறந்து
கனவுலகில் நான்
இருந்த வேளையிலே,

இடைவிடாது பெய்த
உன் அன்பு மழையே
பெருவெள்ளமாய் மாறி
என்னை பதம் பார்த்து சென்றது
எழுந்திருக்க முடியாது,
இடமேதும் தெரியாது
இருந்தாலும்.........
தேடிக்கொண்டிருக்கின்றேன்
உன்னை..........

ப. அபிலாஷா
ஊடகவியல் மாணவி

உரிமையாளர் : இ.நகுலேஸ்வரராஜா பதிவு இல : NAL/DS/961
பாரதி கைத்தொழில் நிலையம்
PAARATHY INDUSTRIES
இல. 19, சம்பியன் லேன்
கொக்குவில், யாழ்ப்பாணம்
No. 19, Champion Lane,
Kokuvil, Jaffna.
T.P : 0774014328
0214921822






## அனைத்தும் உன்னால் தாயே...

உன் அன்பினால்
என்னை அடிமையாக்கி
விட்டாயே தாயே

இதுவரை சற்றுதூரம் விலகாமல் – உன்
நிழலாக என்னை பாதுகாத்தாயே – இப்போது
ஏன் என்னை தொலைவில் தவிக்கவிட்டாய்

என் மகளும் பட்டம் பெற வேண்டுமென்று
பட்டப்படிப்பிற்கு ஆசைப்பட்டு – என்னை
பிரிய எப்படி முயன்றாய் தாயே

பாசாங்கு காட்டாதே தாயே
உன் மனம் உன்னில்
உருவான நான் அறியேனா

என்னை பிரிந்த நீ ஒவ்வொரு
நொடியும் தீக்குழியில் உள்ளாய்
என்பதை நான் அறிவேன்

நீ படிக்காத பேதையாய் இருந்தும்
உன்னை வருத்தி என்னை மேதையாக்க
ஆசைப்படுகிறாயே தாயே

காட்டுவாசி போல் – நீ
கண்டதையும் உடையாய் உடுத்தி
நகரவாசியாய் என்னை அழகு பார்க்கிறாயே

தாயைப் பிரிந்த பிள்ளையின் மனம்
எப்படி சொல்வேனம்மா – நான்
இங்கு படும் துன்பத்தை

எனக்கு உயிர் தந்த தாயே
உனக்காக இந்த நரகவலி கூட
சுகம் தானம்மா

வருந்தாதே தாயே உன் விழி நீரைத்–துடைத்து
உன் மகள் மேதையாகி உன்னருகில்
வாழும் நாள் தொலைவிலில்லை.

கு.டர்சிகா
ஊடகவியல் மாணவி

## அம்மா...

பாரினிலே ஈன்ற முதல் - உன்
இரத்தத்தையே பாலாக ஊட்டி
பாசத்தாலேயே அரவணைத்த - என் தாயே

அன்பாலே அறிவூட்டி
ஒழுக்கங்கள் கற்பித்து - நல்ல
மனிதராக திகழவைத்தவளும் நீயே

எம் தேவைதனை உரிய நேரத்தில்
நிறைவேற்றி எமக்கு சுகங்களை
தந்தவளும் நீயே

தடைகள் நிறைந்த வாழ்விலே
தடம்மாறி செல்லாதிருக்க
வழி நடத்தியவளும் நீயே

இவ் வையகத்தில் என்
இலட்சிய வெற்றியை அடைய
முதற் காரணமாக இருப்பவளும் - நீயே

நீ அளித்த அளப்பெரும் சேவைக்கு
என்ன கைம்மாறு அம்மா - அடுத்த
பிறவி எடுப்பினும் என் தாயாக
நீயே வேண்டும் - அம்மா

ச. பவானி
ஊடகவியல் மாணவி

# அனுவின் வாழ்க்கைப் பாதை

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் எனும் ஊரில் பிறந்த குட்டித் தேவதை தான் அனு. அனுவிற்கு நிருசன், கிருபா எனும் இரு சகோதரர்கள். அவள் பிறந்த சில மாதங்கள் கடந்து அனுவின் அப்ப அவரின் குடும்பத்தை விட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு அனுவின் அம்மாவாகிய தங்கம்மா தன் மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார். குடும்ப வறுமை காரணமாக அனுவின் சகோதரர்கள் மாணவர் விடுதியில் தங்கிப்படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தங்கம்மா கோவில் பணிகளைச் செய்து அதில் வரும் வருமானத்தையே பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய செலவுகளை மேற்கொண்டார். தங்கம்மாவின் சகோதரர்கள் மிகுந்த வசதியுடன் இருப்பினும் தங்கம்மா மற்றவர்களின் உதவியை எதிர்பார்ப்பதில்லை. தங்கம்மாவிற்கு தன்னைப்பற்றி கவலை கிடையாது. தனது மூன்று பிள்ளைகளையும் சமுதாயத்தில் நன்றாக வளர்க்க வேண்டும் என்பதே அவளின் கனவு.

தங்கம்மாவின் இளைய மகளான அனு மிகுந்த புத்திக்கூர்மையும், நற்பண்பும் உடையவள் .அவளின் அன்பு நிறைந்த பேச்சால் அனைவரையும் கவரக்கூடியவள். அனுவிற்கு 6 வயது வந்ததும் அவளும் மாணவர் விடுதியில் தங்கி படிக்கத்தொடங்கினாள். அனுவிற்கு இயல்பாகவே புத்திக்கூர்மை இருப்பதால் தனது பாடசாலையில் முதலாம் பிள்ளையாய் வருவாள். அனுவின் முன்னேற்றத்தை கண்டு விடுதியில் இருப்பவர்கள் பொறாமை கொண்டனர். அது மட்டுமல்லாமல் அவளின் உடல் நலக் குறைவால் பல சிரமங்களின் மத்தியில் நன்றாகப் படித்தாள். அனுவின் பொழுபோக்கு நூலகத்தில் சென்று பயனுடைய பல புத்தகங்களை வாசிப்பது அவளுக்கு பிடித்த விடயம். சக நண்பர்களுடன் அன்பாகப் பழகும் விதமும் மற்றவர்களுக்கு தீங்கிழைக்காத நற் குணமும் அவளுக்கு பல நண்பர் கூட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. நல்ல நண்பர்களை விட பெரிதான சொத்து வேறில்லை என நினைப்பவள். அனுவிற்கு பல நண்பர்கள் இருப்பினும் கீர்த்தி என்ற ஆருயிர் நண்பி இருந்தாள். அவள் அனுவின் மீது மிகுந்த அன்பும் பரிவும் கொண்டவள். இருவரின் நட்பும் 9ம் வகுப்பிலிருந்து ஆரம்பித்தது. கீர்த்தி விளையாட்டுத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவள். கல்வியில் சற்று ஆர்வம் குறைவு என்பதால் பரீட்சையில் சராசரியான புள்ளிகளையே பெறுவாள். அனு விடுதியில் இருந்து படிப்பதால் கீர்த்தியுடன் இருக்கும் நேரம் மிகக் குறைவே. பழகும் நேரம் குறைவாக இருந்தாலும் ஒருவரை ஒருவர் நன்றாகவே புரிந்து கொண்டு இருந்தனர்.

இவ்வாறு நாட்கள் நகர்ந்து சென்றது. இரண்டு வருடங்களின் பின் கீர்த்தி தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்துக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இருவராலும் இந்தப் பிரிவை ஜீரணிக்க முடியவில்லை. இருவரும் கடிதம், தொலைபேசி மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். அனு தனது மனதிலுள்ள கவலைகள், மகிழ்ச்சிகள் எல்லாவற்றையும் உரையாடல் மூலம் பகிர்ந்து கொள்வாள். இருவரும் முக்கிய பரீட்சையான சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்று உயர்கல்வியில் சரியான பாடத்தெரிவினை மேற்கொள்ள வேண்டும். அனு தனது அம்மாவின் கனவை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக மருத்துவத்துறையையும், கீர்த்தி தன்னால் இயன்றளவு வணிகத்துறையையும் தெரிவு செய்து படிக்கத்தொடங்கினர். அனு நன்றாகப் படித்து வந்தாள். சில நாட்கள் சென்றதும் தங்கம்மாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.......

தொடரும்............

ச. லாவண்யா.

# ஆண் பெண் சமத்துவம்

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் பார்த்துவந்த போதிலும்
ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி"

என்று முழங்கினான் மகாகவி சுப்பிரமணிய பாரதி. இத்தளத்தில் நின்று நாம் நம்மவர்களின் இரண்டு யுகங்களை இணைத்து பார்க்கும் போது மனித நேயங்கள் எத்தனை அளவுகோல்களால் அளக்கப்பட்டிருந்தது. அளக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும். இவற்றிலே நாம் முன்னைய யுகத்தின் பால் சென்று பார்க்கும் போது மனிதன் எப்படியாக மனிதனானான்? மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் ஒற்றுமை உள்ளனவா? மனிதன் விலங்குகளுக்கிடையில் ஒற்றுமை உள்ளனவா? மனிதன் விலங்குகளிடமிருந்து உயர்ந்தவனாகக் கருதப்படக் காரணம் என்ன? இது போன்ற வினாக்களுக்கு விடை தேட முற்படும் எம் உள்ளம் பல உண்மைகளைப் புரிந்து கொள்ளும்.

"விலங்கோடு மக்கள் அனனையர் நூல்
கற்றோடு ஏனையவர்"

என்பார் பொய்யாமொழி இதன் பால் பொதிந்துள்ள கருத்தினை. நாம் இலகுபடுத்திப் பார்த்தால் மக்களுக்கும் விலங்குகளுக்குமிடையில் வேறுபாடு இருப்பதைப் போன்று நூல்களைக் கற்றவர்களிற்கும் கல்லாதவர்களிற்குமிடையே வேறுபாடு உண்டு என்பர். இங்கு கற்றவர்களை உயர்வுபடுத்தும் மரபும் கல்லாதவர்களை இழிவுபடுத்தும் மரபும் உருப்வெடுத்திருக்கிறது என்று எம்மால் ஊகிக்க முடிகின்றது. இவ்விடயத்திலேதான் மக்கள் விலங்குகளிடமிருந்து உயர்ந்தவர்களாக மாற்றமடைகின்றார்கள்.

இவ்வாறு விலங்குகளிடமிருந்து உயர்வடைந்த மானிடன் ஏன் தனக்குள்ளும் ஓர் ஏற்றத்தாழ்வை உண்டு பண்ணினான். வாருங்கள் சிந்திக்கலாம்.



காட்டில் வேட்டையாடி காலம் கழித்த மானிடன் குடும்பமாக கூடிவாழ ஆரம்பித்த போ. பெண் வீட்டில் தலைவியாகவும் வேட்டைக்கு செல்பவளாகவும் வீட்டைக்கட்டிக் காப்பவளாகவும் திகழ்ந்தாள். கால நகர்ச்சியினால் விவசாயத்தைக் கற்றுக்கொண்ட மானிட யுகத்தின் தலைவி அப் பொறுப்பை ஆணிடம் ஒப்படைத்தாள். இதன் போது குடும்பத்தில் தலைவி உணவு தயாரிப்பவளாகவும் பிள்ளைகளைப் பராமரிப்பவளாகவும் திகழத் தலைவன் விவசாயம் செய்பவனாகவும் வேட்டையாடுபவனாகவும் கொடிய விலங்குகளிடமிருந்து வீட்டைப் பாதுகாப்பவனாகவும் தமக்கடையே வேலைகளைப் பகிர்ந்து சமத்துவமாக வாழ்வை நகர்த்துகின்றார்கள். குடும்பத்தில் சமத்துவமாக வாழ்வை நகர்த்திக்கொண்டிருந்த குடும்பத்தின் தலைவனானவன் விலங்குகளைப் பராமரிக்கின்றான். பின் விலங்குகளை மேய்ப்பதற்காகப் புற்றரைகளையும் நீர் நிலைகளையும் நாடிச் செல்கின்றான். இந்நிலை அவனிற்கு வெவ்வேறு இடங்களிற்குச் சென்று வெளியில் பல விடயங்களையும் கற்றுக் கொள்கிறான். இப்போது குடும்பத்தில் பெண்ணை விடவும் ஆண் அறிவுப்பரவலாக்கம் அடைகின்றான் இப்படியாக நகர்ச்சியடைந்த சமுதாயம் பெண்களைத் தரம் குறைந்தவர்களாக கருதுகின்றது, அவளை

இதனை,

"கற்பு நிலை யென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்தல், பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்" என்ற

பாரதியின் புரட்சியிலிருந்து அறிய முடியும். இந்த நிலையைத் தகர்தெறியப் போராடியவனே பாரதி என்பதையும் இந்த நிலையில் மனங்கொள்ள வேண்டும். பாரதிக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பெண்களை மாட்டை அடிப்பது போல அடித்தார்கள், ஏட்டைத் தொடக்கூடாது என்று எச்சரித்தார்கள், நாயை விற்பது போன்று விற்றார்கள், பெண்களைக் கணவன் இறந்த பின் உடன் கட்டை ஏற வற்புறுத்தினார்கள், சபையின் முன்னே வர தடைவிதித்தார்கள், ஏன் இச்சையை போக்கும் இயந்திரமாகவே கருதினார்கள் எனலாம்.

இனி நாம் பாரதிக்கு பிற்பட்ட யுகத்திலிருந்து பார்க்கும் போது ஆண், பெண் என்ற நிலையில் சமத்துவம் எவ்வாறு தன்னுடைய இருப்பை தக்க வைத்துள்ளது என்று ஆராய்வோமேயானால் பெண்களுக்கெதிரான வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும், பாலியல் வன்புணர்வுகளும், நாட்டுக்கு நாடு இடத்துக்கிடம் மலிந்து காணப்படுகின்றன. செய்திகள் அனுதினமும் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் அம்பலப்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளன. இந்தியாவில் 27 செக்கனுக்கு ஒரு பெண் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. மேலும் யுனிசெப், அறிக்கையின் படி ஆசியாவில் மட்டும் வருடத்தில் 5 இலட்சம் பெண்கள் கடத்தப்படுகின்றார்கள். இன்னும் கூரிய ஆயுதங்களினால் தாக்கப்படுகின்றார்கள். அத்தோடு விலை மாதுக்களாகவும் மாற்றப்பட்டுத் துன்புறுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான அவலங்கள் நாளுக்கு நாள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

உதாரணமாக நேபாள நாட்டின் பசுடீஷ் மலை ஜாதியினர் தாய்மார் பருவமெய்திய பெண்பிள்ளைகளுக்கு விழா எடுத்து (70% ஆன பெண்கள்) பாலியல் தொழிலில் ஈடுபடுத்துகின்றார்கள். அது மட்டுமன்றி தந்தையாலும், மாமனாலும், நெருங்கிய உறவுகளாலும், பெண்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள். இவ்விடயத்தைச் சற்று நுணுகிப் பார்க்கின்ற போது

சிறுவர் பாலியல் தொழிலாளர்கள்

| | |
|---|---|
| இலங்கை | : 6 – 14 – 10,000 பேர் |
| இந்தியா | : 10 – 18 – 5,000 பேர் |
| ஐக்கிய அமெரிக்கா | : 4 இலட்சம் சிறார்கள் |
| தாய்லாந்து | : 1 இலட்சம் |

உலக மையம் (கடத்தப்படும் பெண்கள்)

போன்ற உண்மைகள் அம்பலப்படுகின்றன. இது மட்டுமன்றி 2009 ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் பின் வடமாகாணத்தில் 80 ஆயிரம் விதவைகளும் கிழக்கு மாகாணத்தில் 70 ஆயிரம் விதவைகளும் நிறைந்து காணப்படுகின்றார்கள். இவர்களும் பலவிதமான கஷ்டங்களுக்கு முகம் கொடுப்பதோடு உதவி செய்வதாகக் கூறிப் பல பசுத்தோல் போர்த்திய புலிகளால் இரையாக்கப்பட்டுக் கொண்டிருப்பதும் வருத்தத்திற்குரிய செய்தியே ஆகும்.

பெண்ணை உயர்வாகக்கருதியது எம் இனம் இதனால் தான் பூமியை பூமாதேவி என்றும் நதியை கங்காதேவி என்றும் மகாவலி கங்கை என்றும் பலவிதமாக இயற்கைக்குப் பெண்ணின் நாமம் சூட்டி ஏற்றிப் போற்றினார்கள். ஆனால் சமத்துவமானது இன்றும் சரி, அன்றும் சரி சரியாக பேணப்படுகின்றனவா? என்பது தான் கேள்விக்குறி. கல்வியை பெண்கள் கற்று நாட்டு நடப்பை அறிகின்ற போது நன்மைகள் பெருகுகின்றது. இதனை கவிச்சக்கரவர்த்தி கம்பன் இவ்வாறு பாடுகின்றான்,

"பெருந்தடங் கட்பிறை நுதலார்க் கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தி மன்றி விளைவன யாவையே"

இத்தனை நன்மைகளைப் பின்பு வந்த புலவன் பாரதியும் அறிந்தான். அதனால் தான்

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி"

என முழங்கினான்.

அதாவது சான்றோருடைய எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் பெண்கள் ஆணுக்கு சமமாக வாழவேண்டும் என்பதேயாகும். பெண்களும் சான்றோராகவும், ஆன்றோராகவும் திகழ வேண்டும் என்பதேயாகும். எனவே நாம் சட்டத்தில் முத்திரை பொறித்து வைத்து விட்டு அவற்றை எல்லாம் நிஜத்தில் நித்திரையாக்காது மொழியிலும் சரி, கல்வியிலும் சரி ஆணுக்கு சமமாகப் பெண்ணைப் போற்றுவோம். மதிப்போம், திருவள்ளுவர் மொழிந்ததை, கம்பன் கையில் தவழ்ந்ததை, பாரதியின் பார்வையில் புரண்டதை எம் வாழ்விலே மெய்யாக்குவோம். ஆணும், பெண்ணும் சமத்துவமாய் வாழ்வோம். அகிலம் பேணும் மகத்துவத்தை நாடுவோம்.

வாழ்க தமிழ்! வளர்க கலை.

தி. ஜனனி
கலைப்பிரிவு (2014)
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## கவிதைப் போட்டி

மாணவர்களின் எழுத்தாற்றலையும் திறமையினையும் வெளிப்படுத்தும் நோக்குடன் யாழ் முழக்க சஞ்சிகை கவிதைப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. போட்டியில் மாணவர்கள் அனைவரும் பங்கு பற்ற முடியும்.


பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து எட்டு வரிகளிற்கு குறையாமல் 02-04-2015 ற்கு முன்னர் தங்களது ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.

**போட்டித் தலைப்பு :-**

1. **எனக்கும் இருக்கிறான் ஒரு நண்பன் .....**
2. **பிரியமான நட்பு .............**

அனுப்ப வேண்டிய முகவரி : யாழ் முழக்கம்
கட்டுரைப் போட்டி
பிரதம ஆசிரியர்
வே.தவச்செலவம்
தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.

# இளைஞர்களின் வாழ்வை சீரழிக்கும் தொலைபேசி



இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் உலகின் பலவித மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. தொலைத்தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியும், எழுச்சியும் உலகத்தை உள்ளங்கைக்குள் கொண்டு வந்துள்ளது. அந்தளவுக்கு விஞ்ஞானத்தில் விந்தை வியப்பாகவுள்ளது. விஞ்ஞானம் வாழ்க்கையின் வாழ்வாதாரம் என்றால் மெய்ஞானம் வாழ்க்கையின் மூலாதாரம் எனச் சொல்ல முடியும்.



எந்தவொரு விஞ்ஞான கண்டு பிடிப்பிலும் நன்மையும், தீமையும் சரிவிகிதம் கலந்தே இருக்கின்றது. இன்று "செல்போன் இல்லாத கை வெறுங்கை" எனும் அளவுக்கு கையடக்கத்தொலைபேசி மலையளவு உயர்ந்துள்ளது. ஒரு காலத்தில் செல்போன் வைத்திருப்பவன் செல்வந்தன் என்ற நிலை இருந்தது. இன்று பிச்சை எடுப்பவன் கையிலும் செல்போன் என்றாகி விட்டது. "செல்போன் இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியாது" என்பது இன்றைய இளசுகளின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளாகவுள்ளது. செல்போனே வாழ்க்கை, செல்போனே உலகம் எனும் மாயைக்குள் சிக்கி பல இளசுகள் தங்கள் வாழ்க்கையில் பல இன்பங்களை தொலைத்தவர்களாகவுள்ளனர்.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்." என்பதைப் போல கையடக்கத் தொலைபேசிகளின் கட்டுக்கடங்காத வருகையினால் கலாசார பிறழ்வுகளும் சுற்றுப்புறச் சூழலும் பாதிப்புற்று வருகின்றன. சனத்தொகையை பார்க்கிலும் செல்போன்களின் தொகையின் அதிகரிப்பு எதிர்கால உலகுக்கு சவால்மிடுமளவுக்கு அமைந்துள்ளது. இன்று நிலமை தலைகீழாகி விட்டது. ஒரு வீட்டின் 10 பேர் இருந்தால் ஆளுக்கொரு செல்போன் நிச்சயம் இருக்கும் காலையில் எழுந்ததும் "தேத்தண்ணீ" குடிக்கிறார்களே என்னவோ தெரியவில்லை தமது செல்போனுக்கு ரீலோட் செய்வதற்கு எவரும் மறப்பதில்லை இவர்கள் செல்போனுக்கு செலவளிக்கும் பணத்தை சாப்பிடுவதற்கு செலவளிப்பதை விட அதிகமாயிருக்கிறது.

முன்பெல்லாம் தூர இடங்களில் இருப்பவர்களுக்கு தந்தி மூலம் சுருக்கமாகத் தகவல் அனுப்புவார்கள் அல்லது போஸ்ட் காட்டில் எழுதி போடுவார்கள் இன்று செல்போன் மூலம் குறுந்தகவல் ஒன்று அனுப்பப்படுகின்றது. தொலைபேசிகள் தகவல் சொல்லும் கருவி என்ற நிலை போய் தொல்லை தரும் சாதனமாக மாறியுள்ளதை இன்று நாம் காண்கின்றோம். தேவைக்கு பயன்படுத்த வேண்டிய செல்போனில் தேவையில்லாத பேச்சை பேசுவதன் மூலம் பணத்தையும், நேரத்தையும் வீணடித்துக் கொள்கின்றனர். இது தவிர பணம் கொடுத்து தொல்லைகளையும் கூடவே வாங்கிக் கொள்கின்றனர்.

செல்போனை மிக நீண்ட நேரம் உபயோகிப்பதால் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. என சொல்லப்படுகின்றது. செல்போனில் இருந்து வெளிப்படும் மின்காந்த அலைகளால் பேசுபவர்கள் மூளையில் கட்டி ஏற்பட்டு மூளைப்புற்றுநோய் ஏற்படும். நரம்பு தளர்ச்சி, கேட்கும் திறன் குறைதல் போன்ற பாதிப்புகள் ஏற்படும் என கூறப்பட்டு வருகின்ற போதிலும் இந்தத் தகவல் ஆதாரமானவை என்றும் ஆதாரமற்றவை என்றும் சொல்லப்படுகிறது.

இந்த ஆய்வில் செல்போன் கதிர்வீச்சால் வேறு உடல் நல பாதிப்பு ஏற்படுவதாக கண்டு பிடிக்கவில்லை . ஆனால் தோல் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது. எது எப்படி இருந்த போதிலும் அளவுக்கு அதிகமான செல்போன் பேச்சுக்களால் நாம் ஆயுளுடன் விளையாடுகிறோம் என்பது மட்டும் உண்மையாகும்.

செல்போன் பாவனை மூலம் சமூகத்தில் கலாசார சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றன. இலஙகை போன்ற பாரம்பரியகலை, கலாசார பண்பாட்டிற்குப் பெயர் போன இப்புண்ணிய பூமியில் செல்போன் சீரழிவில் சிக்கிய இளைஞர், யுவதிகள் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். கடைகளில் வித விதமான வடிவங்களில் கிடைக்கும் செல்போன்களில் கமரா பதிப்பதினால் பல்வேறுபாதிப்புக்களுக்கு பெண் ஆளாகி வருகின்றனர். இச்செல்போன்கள் மூலம் பெண்களை அவர்களுக்கு தெரியாமல்அனுமதியின்றி படம் எடுப்பது அதை பலருக்கு அனுப்புவது. ஆபாச படங்களை பரப்புவது என பல செல்போன் குற்றங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். செல்போனில் பேசப்படும் எந்தப் பேச்சும் எதிரில் இருப்பவரால் எந்நேரமும் பதிவு செய்யபப்டலாம்.சில வேளை நமக்கு எதிராகக் கூடப்பயன்படுத்தலாம். செல்போனில் யோசித்து சுருக்கமாக பேச வேண்டும்.

இப்போது எங்கு பார்த்தாலும் காப்பு, சீப்பு, கடைகளைப் போல் செல்போன் கடைகள் நிறைந்துள்ளன. அக்கடைகளில் ஏற்றுவதற்காக செல்போன் கொண்டு போய் கொடுக்கின்றார்கள். உங்கள் போனை எடுத்து ஒரு கிளிக் செய்தால் உங்களது போனிலுள்ள எல்லா தகவல்களும் அவர்களது கம்பியூட்டருக்கு போய்விடும். அதில் உங்கள்போன் மெமரியிலுள்ள எல்லா தொடர்பு இலக்கங்கள் தனிப்பட்ட தகவல்கள் வேறு சேமித்துவைக்கப்பட்ட எண்கள் இரகசிய குறியீட்டு இலக்கங்கள் எல்லாம் பிரதி பண்ணப்பட்டு விடலாம். முக்கியமாக உங்கள் செல்போனையோ சிம்காட்டையோ பிறர் பயன்படுத்துவதற்கு கொடுக்காதீர்கள்.

செல்போனில் எஸ்.எம்.எஸ் அனுப்புவது பாட்டு கேட்பது, சினிமா பார்ப்பது, இன்டர் நெட் பாவிப்பது போன்ற மல்டிமீடியா பயன்பாட்டால் மாணவர்களது படிப்பில் கவனம் சிதறுகிறது. அத்துடன் மாணவர்கள் கையில் கையடக்கத் தொலைபேசி இருப்பது கூடவே "எமன்" உலவுவதைப் போன்றது. பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு செல்போனைக் கொடுத்து காட்டாதீர்கள்.

செல்போனில் பேசிக் கொண்டே வீதியைக் கடப்பவர்கள் வீதி விபத்தில் சிக்கிக் கொள்கின்றனர். உங்கள் கையில் இருக்கும் செல்போனே உங்களுக்கு எமன் என்பதை மறந்துவிடவேண்டாம். இப்போது வீட்டை விட்டு வெளியே சென்றாலும் செல்போன் இருக்கிறதா என்றுதான் கை தொட்டுப்பார்க்கின்றது. அந்தளவுக்கு செல்போன் நம்மில் அத்தியாவசியப் பொருளாகிவிட்டது.

செல்போன் இல்லாமல் ஒரு விநாடி கூடி இருக்க முடியாது என்று 66 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். மேலும் 75 சதவீதம் பேர் பாத்ருமிலும் செல்போன் பயன்படுத்துகின்றனர். 49 சதவீதம் பேர் தங்களது மனைவி கூட தனது செல்போனை பார்க்க கூடாது என நினைக்கின்றனர். இவ்வாறு இங்கிலாந்தின் செக்யூர் என் வாய் அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தளவுக்கு செல்போன் பைத்தியம் எல்லோரையும் ஆட்டுவிக்கின்றது.

இன்று போதைவஸ்து பாவனையைப் போல் செல்போன் மோகம் இளசுகளை தவறான வழிக்கு கொண்டு செல்கின்றது. செல்போனால் சீரழிந்த பல குடும்பங்கள் திக்குத் திசை தெரியாது சிதறிப் போய் கிடக்கும் பரிதாபகரமான சம்பவங்களும் இங்கு இடம்பெற்றுள்ளன. செல்பொன் என்பது எமது கையில் இருக்கும் எமன் என்பதை புரிந்து கொண்டால் அதை அளவறிந்து பயன்படுத்தலாம். செல்போன் எம்மை ஆளக்கூடாது. செல்போனை நாம் தான் ஆள வேண்டும்.

*சி.கர்ணிகா*

*ஊடகவியல் மாணவி*

# கூட்டுறவுத் துறையில் ஏற்படும் மோசடிகள்

கூட்டுறவு என்பது மக்கள் நலனுக்காக இயங்கும் ஒரு தனியார் அமைப்பாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பங்குதாரர்கள் இணைந்து இயங்கும் ஒரு சேவை ரீதியான நிறுவனமாகும். பெரும்பாலும் மக்களோடு தொடர்புபட்டதாக, அவர்களோடு வாழ்வியலோடு தொடர்புபட்டதாக கூட்டுறவு காணப்படுகின்றது என்றால் மிகையல்ல.

மக்களால் மக்களுக்காக மக்களின் பிரதிநிதிகளால் செய்யப்படும் ஆட்சியே ஜனநாயக ஆட்சி என்பது பெரும்பாலும் மக்களின் நலனுக்காக இயங்கும் ஒரு தனியார் நிறுவனமே கூட்டுறவு எனலாம். குறித்தளவிலான பங்குதாரர்களினால் குறித்தளவு மூலதனமிடப்பட்டு கூட்டுறவு இயங்கி வருகின்றது.

தற்காலச் சூழலில் கூட்டுறவுத்துறையின் போக்கில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மக்களிற்கான சேவைக்காக செயற்பட்டு வரும் கூட்டுறவானது இலாப நோக்கத்துடனும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தற்காலச் சூழ்நிலையில் கூட்டுறவுத்துறையை எடுத்துக்கொண்டால் இலாபச்சூழ்நிலை அற்ற நட்ட நிலையில் இயங்கிவருகின்றது. இவ்வாறு நட்டநிலையில் இயங்கிவருவதற்கான காரணமாக தரமற்ற பொருட்கள் விற்பனை, தனியார் வர்த்தக நிலையங்களின் அதிகரிப்பு, தனியார் வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலையை விட கூட்டுறவுத்துறையில் விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலை வீதம் அதிகளவில் இல்லாது குறைந்தளவிலான வீதமாகக் காணப்படுகின்றமை, தனியார் வர்த்தக நிறுவனங்களுடனான போட்டி விற்பனை கூட்டுறவுத்துறையில் காணப்படாமை என்பன ஆகும்.

மேலும் இவ்வாறு நட்ட நிலையில் இயங்கிவரும் கூட்டுறவுத்துறையில் இடம்பெறும் ஊழல்கள் எண்ணிலடங்காதவை. அவற்றுள் கூட்டுறவுத்துறை திணைக்கள அதிகாரிகளின் கவனயீனத்தால் அதிகமான ஊழல்கள் இடம் பெறுகின்றன. அதாவது ஒழுங்கீனமற்ற தலைமைத்துவ வழிகாட்டல்களே இதில் முக்கிய இடம்பெறுகின்றன. தமது பொறுப்புக்கள், கடமைகளை மறந்து சுயதீனமாக தன்னிச்சையாக உரிய அதிகாரிகள் செயற்படுவதினால் கூட்டுறவு ஒழுங்கான கட்டமைப்புக்குள் செயற்படாது செயலிழந்து நலிவடைந்து செல்கின்றது.

கூட்டுறவுத்துறை பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் நன்கு பயிற்றுவிக்கப்படாது குறுகிய காலப் பயிற்சியுடன் கடமைக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இச் செயல் காரணமாக அப் பணியாளர்களால் வினைதிறனாக செயற்பட முடியாத நிலை காரணமாகின்றது. ஊழியர்களின் வினைதிறனற்ற தொழிற்பாடு காரணமாக கூட்டுறவுத்துறையில் ஊழல்கள் இலகுவாக ஏற்பட சாதகமான சூழ்நிலை காணப்படுகின்றது.

மற்றும் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் மக்களின் கொள்வனவு பொருட்களில் ஊழல்களை மேற்கொள்கின்றனர். அதாவது சரியான நிறுத்தல் அளவு இங்கு காணப்படுவது இல்லை. பொருட்களில் அளவுகளை சரியான நிலையில் பேணுவது இல்லை. கொள்வனவு பொருட்கள் பொருத்தமான அளவு இன்றி குறைவான வீதத்திலேயே அளந்து கொடுக்கப்படுகின்றது. இது கூட்டுறவுத்துறையில் காணப்படும் பேரளவான ஊழல் மோசடி ஆகும்.

ப. அபிலாசா
ஊடகவியல் மாணவி

# 20/02/2015 இல் யார் இந்த ஜெசிக்கா!



சென்னையில் நடைபெற்ற சூப்பர் சிங்கர் நான்கின் இறுதி நிகழ்வில், இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில், பிரம்மாண்டமான மேடையில், ஈழத்துக்குயில், "அழகு மலர் ஆட" பாடலை முதற்சுற்றிலும், இரண்டாம் சுற்றில் "தோல்வி நிலையென நினைத்தால்/விடை கொடு எங்கள் நாடே" என்ற பாடல்களையும் பாடி, உலகத் தமிழ் மக்கள் கண்களில் மட்டுமல்ல, பார்த்தவர்கள் அத்தனை பேர்களின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்திருந்தார்.

இசையால் உயர்ந்த இந்த இளம் பாடகி பாடுவதில் வெகு விரைவில் முன்னேற்றமடைந்த பாடகி என்ற விருதைப் பெற்று தனது உழைப்பை வெளிப்படுத்திய இந்த இளம் நங்கை இறுதிச் சுற்றிற்கு யாரைக் கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள் என்பதை நடுவர்களின் குறிப்பிலிருந்தும், செய்கையிலிருந்தும் உணர்ந்த தமிழ் மக்கள் வைல்ட் கார்ட் மூலமாக கிட்டத்தட்ட 14 இலட்சம் வாக்குகளை அள்ளி வழங்கி, நடுவர்களின் இலக்கைத் தகர்த்தெறிந்தார்கள்.




தமிழர்கள் உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்கள் புரிந்து வரும் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை. அந்த விதத்தில் உலகத் தமிழர்கள் தங்கள் கடமையை நன்றாகச் செய்துள்ளார்கள். "தோல்வி நிலையென நினைத்தால்/ விடை கொடு நாடே" பாடல்கள் மூலம் ஈழ மண்ணின் மக்களின் உணர்வையும் புலம்பெயர் தமிழர்களின் நிலையையும் ஐந்து நிமிடங்களில் பாடி, பாடும் முன்பு இலங்கை / ஈழ மக்களுக்கு அர்ப்பணித்த அந்தப்பாடலால், TMS மெல்லிசை மன்னரோடு சேர்ந்து பாடிய திரு.மாணிக்க விநாயகம் அவர்களினால் - இன்று இந்தப் பாடல் மூலம் ஈழத்தமிழர்கள், புலம்பெயர் தமிழர்கள் மட்டுமல்ல உலகத் தமிழர்கள் அனைவரையுமே அழவைத்துவிட்டார் - என்றார்.

இதற்கு ஒரு படிமேல், இன்றைய இளம் தலைமுறைக் கதாநாயகர்களில் முன்னிலையில் திகழும் தனுஸ் அவர்கள் கண்ணீர் கலங்கிய நிலையில் ஈழத்தமிழ் மக்களின் ஆதங்கம், வலி, ஓலத்தை இந்த ஈழத்து இளம் நங்கை புரியவைத்துள்ளார். இதுதான் "Power of Music" என்றார். பாடலில் மட்டுமல்ல ஜெசிக்காவின் முகத்திலும் பாடலைப் பாடும் போது சோகத்தின் உணர்வுகளை காணக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு சொற்களையும் அறுத்துறுத்து தெளிவாகப் பாடி கனடாவில் பிறந்து வளர்ந்தாலும் "நான் ஈழத்தமிழிச்சி தான்" என பாடலாலும் உணர்வுகளாலும் வெளிப்படுத்தி கோடானு கோடி தமிழ் உள்ளங்களில் இடம் பிடித்து விட்டார். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தால் போல் இந்த ஈழத்துத் தமிழ் சிறுமி, தனக்குப் பரிசாகக் கிடைத்த ஒரு கிலோ தங்கத்தை தனது

தந்தை மூலம் ஒரு பகுதியை இந்தியாவிலுள்ள அனாதைக் குழந்தைகள் காப்பகம் ஒன்றிற்கும் மிகுதியை ஈழத்தில் வாழும் தாய் தந்தையர்களை இழந்த அனாதைக் குழந்தைகளுக்கு வழங்குவதாகவும் அறிவித்து மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து விட்டாள். ஒரு சிலரைத் தவிர பலருக்கு இந்தச் சிறுமியின் வரலாறு தெரியாது. இந்த இளம் குயிலை எங்களுக்குத் தந்த மண்ணும் வடமராட்சிதான். ஜெசிக்காவின் அப்பா பாடசாலை நாட்களிலேயே சினிமா பாடல்கள் பாடுவதில் சிறந்தவர். இப்பொழுதும் கனடாவில் மேடைகளில் பாடி வருகிறார். ஜெசிக்காவின் அம்மாவின் தம்பி மோகன் வாத்தியக் கருவிகள் இயக்குவதில் வல்லவர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து கனடாவில் ஒரு இசைக் குழுவையே வைத்திருக்கிறார்கள். ஜெசிக்கா குடும்பத்தினர் ஒரு கிலோ தங்கத்தை அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கியது ஆச்சரியமல்ல. அவர்கள் அதனிலும் பார்க்க பெரிய சேவைகளை செய்து வருகிறார்கள். இன்றும் தங்களின் பிறந்த மண்ணை அவர்கள் மறக்கவில்லை. முனையிலுள்ள யா/கலட்டி றோ.க.த.க பாடசாலை 3 வருடங்களுக்கு முன்பு மிகவும் பின் தங்கியும் அழிவுற்றுச் செல்லும் நிலையிலும் இருந்த பொழுது இதைக் கேள்வியுற்று, தங்கள் இசைமன்றத்தின் மூலமாக 5 இலட்சம் ரூபாவை சேர்த்து இங்கு அனுப்பி வைத்து பாடசாலையின் வீழ்ச்சியை தடுத்து நிறுத்தி இன்று உயர்ந்து நிற்க அத்திவாரமிட்டவர்கள்.

கனடாவில் பிறந்து வளர்ந்தாலும், ஈழ மண்ணையும், அங்குள்ள கலாசாரங்களையும், நிகழ்வுகளையும் கல்வி, செல்வம், வீரம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும் பருத்தித்துறை தான் இச்சிறுமியின் பூர்வீகம். கடற்கரை வீதியில் உள்ள "சின்னத் தோட்டத்தின்" பரம்பரை உரிமையாளராக இருந்தவரும் இன்றைய தலைமுறையில் தற்போது போயிட்டியில் வாழ்ந்து கொண்டிருப்பவருமான திருமதி.றெஜினா மலர் துரைராசசிங்கம் அவர்களின் மூத்த மகன் தான் ஜெசிக்காவின் அப்பா ஜூட். ஜூட்டின் அப்பா இளவாளையைச் சேர்ந்த சிறிய கிராமமான போயிட்டியைச் சேர்ந்தவர். ஜூட் ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது பொறியியலாளர் படிப்பைத் தொடர முடியாமல் இந்தியா சென்று பொறியியலாளரானார்.



ஜெசிக்காவின் அம்மா முனையைச் சேர்ந்தவர். அம்மாவின் அப்பா அந்த நாளில் மிகவும் பிரபல்யமான ஆசிரியர். "றெமிசியார் மாஸ்ரர்" என்றால் அவ்வூரில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. பாடசாலை விழாக்கள், தேவாலய நிகழ்வுகளில் "ஆர்மோனிய" வாத்திய கருவியை வாசித்து பாடல்களை இயற்றி பிரபல்யம் பெற்ற ஆசிரியர்.


தனது பெற்றோர்களாலும், முக்கியமாக அம்மம்மாவினாலும் அறிந்தும், அந்த நினைவுகளை மறக்க முடியாமல் மேடையில் கண்ணீர் மல்கி நினைவு படுத்தியவர். இவரினால் புலம்பெயர் ஈழமக்கள் மட்டுமல்ல, ஈழத்தின் மட்டுமல்ல யாழ்ப்பாணம் போயிட்டி, வடமராட்சி மக்கள் மட்டுமல்ல பருத்தித்துறை நகரமும் குறிப்பாக சின்னத்தோட்டம், முனை மண்ணும் பெருமையடைகின்றது.

சி. நவீந்திரா
ஊடகயவியல் மாணவன்

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளரின் கலைப்பயணம் தொடர்பான நேர்காணல்

அறிமுக உரை

வடபுலத்தில் கவிஞர் முருகையனின் பாதையில் பயணிக்கின்ற கவிஞர்களில் இ.த.ஜெயசீலனும் முக்கியமானவர். இவருடைய ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் ஏற்கனவே பல கவிதைத் தொகுப்புக்களை வெளியீடு செய்துள்ளார். இவருடைய கவிதைகள் சமுதாயத்தை வழிப்படுத்துவதாகவும் சமுதாய பிறழ்வுகளை எடுத்தியம்புவதாகவும் காணப்படும். இவருடைய கவிதைகளில் இவருடைய ஆளுமை, தூரநோக்குப் பார்வை என்பன வெளிப்பட்டு நிற்கும். இவர் ஒரு கவிஞர் மாத்திரமின்றி முன்னாள் மருதங்கேணி, காரைநகர் பிரதேச செயலாளராக கடமையாற்றி சிறந்த சேவைகளை செய்ததுடன் தற்போது வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். மேலும் இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளராகவும் சிறந்த அரச நிர்வாக அதிகாரியாகவும் செயற்பட்டு வருகிறார். இவரது கலைப்பயணம் தொடர்பாக யாழ் முழக்கம் சஞ்சிகையின் நேர்காணல் செய்வதில் பெருமையடைகின்றோம். இவரது நேர்காணல் பின்வருமாறு.....



கேள்வி : நீங்கள் கலைத்துறையில் ஈடுபடத் தூண்டிய காரணி என்ன?

பதில் : திடீரென்று கிடைத்த ஒரு வாய்ப்பு எனக்குள் புதைந்திருந்த திறமையை நானே அறிந்து கொண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சி அதன் பின் கலைத்துறையில் ஏற்பட்ட இயல்பான விருப்பம். நல்ல படைப்புகளைப் பயின்றதால் ஏற்பட்ட இரசனை, இரசிப்பினால் தோன்றிய மனநிறைவு, ஆத்மதிருப்தி என்பன தூண்டிய காரணிகள் என்பேன்.

கேள்வி : நீங்கள் கலைத்துறையில் சந்தித்த சோதனைகள், தடைகள் என்பவற்றைக் குறிப்பிட முடியுமா?

பதில் : சோதனைகள், தடைகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக கலைத்துறையில் குறிப்பாகக் கவிதைத்துறையில் ஈடுபட்டு வருகின்ற போது அன்றாட வாழ்க்கையில் தோன்றுகின்ற பல சோதனைகள், தடைகள் என்னைத் தடுக்க முற்பட்டிருக்கின்றன. என்றாலும் அணையாத சுடராக என்னுள் தொடர்ந்து எரியும் கலை தொடர்பான உந்துதலும், கலைஞனாக நிலைக்க வேண்டும் என்று இடையாறாது என்னுள் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒரு குரலும் வரும் தடைகளைச் சோதனைகளைத் தாண்டி என்னைக் கலைஞனாக இன்றும் வைத்திருக்கிறது. இதனால் இடைக்கிடை தோன்றும் சலிப்பும். மனத்தடையும் கூட இயல்பாகவே அகன்று விடுகிறது.

கேள்வி : உங்களது முதலாவது படைப்பு எத்தகைய உணர்வலையை உங்களிடம் தோற்றுவித்தது?

பதில் : எந்தக் கலைஞனுக்கும் தன் முதலாவது படைப்புக்குக் கிடைக்கும் வரவேற்பும் பாராட்டும் வாழ்த்துக்களும் மிகப் பெரும் உற்சாகத்தைத்தரும் என்பதை மறுக்க முடியாது. என் முதற் படைப்பு வரவேற்கப்பட்ட போது எனக்கு முடி சூடியது போன்ற உணர்வு ஏற்பட்டது உண்மை. ஆனால்

அந்த உணர்வு தொடர்ந்து தலைக்கனமாக மாறமற் பார்த்துக் கொண்டேன். அதனால் இன்றும் மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது. எனது படைப்பை நிராகரிப்பவர்களைப் பற்றியும் துளியும் கவலை கொள்ளாமல் நகரமுடிகிறது.

**கேள்வி : உங்களை இத்துறையில் ஊக்குவித்தது யார்? அவ்வாறானால் அவரை உங்களது குருவாகக் கொள்ளலாமா?**

பதில் : என்னை ஊக்குவித்தது ஒருவரல்ல. பலர். அவர்கள் எல்லோரும் எனது வழிகாட்டிகள் தான் அவர்கள் காட்டிய வழியிலே பயணிக்கிறேன். குரு என்பது வேறு எனது குருநாதரை இன்னும் நான் சந்திக்கவில்லை.

**கேள்வி : உங்களுடைய இறுதியாக வந்த படைப்பு எது? இப்படைப்பு வெளிவருவதில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

பதில் : "என் கவிதை" – தன்னை வெளிப்படுத்துகின்ற வேளையெல்லாம் நான் என் கவிதைகளைப் பிரசவிக்கிறேன். என் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு பிரசவம் தான். அவை ஒவ்வொன்று எனக்குச் சவால்கள் தான். தாய்மார்களுக்குப் புரியும் ஒரு பிரசவத்தின் வேதனை, வலி, சவால் என்பன அப்படிப் பார்த்தால் எனக்கு ஏற்பட்ட பிரசவ வேதனைகள் எண்ணற்றவை. இவற்றை அனுபவித்தபடிதான் என் படைப்புகளைப் பிரசவிக்கிறேன். என்னால் இறுதியாகப் படைக்கப்பட்ட படைப்பும் இவ்வாறானதே. இவற்றில் இறுதியாக பிரசுரமானவை, அரங்கில் ஏறியவை, தொகுப்பு நூலாக வெளிவந்த சொற்பமானவையே.

**கேள்வி : உங்களது குடும்பத்தினரின் ஒத்துழைப்பு உங்கள் கலைப்பயணத்திற்கு வலுச் சேர்க்கிறதா?**

பதில் : 'என்வழி தனிவழி' என்பது போல் என் கலைப்பயணமும் தனி வழி தான். அதில் வழித்துணைகள் என்று குடும்பத்தாரைக் கூறமுடியாதெனிலும் அவர்கள் என் வழித்தடைகளாக என்றும் இருந்ததில்லை. அவர்களது ஒத்துழைப்பும் வாழ்த்துக்களும். என் வெற்றிகளில் அவர்களின் பிரசவமும் என் பயணத்தை உற்சாகப்படுத்துகின்றன என்பேன்.

**கேள்வி : உங்கள் பதவி நிலை உங்களது கலைப்பணயத்திற்குத் தடையாக இல்லையா?**

பதில் : முற்று முழுதான தடை என்று இல்லை. ஆனால் எனது சுதந்திரமான இயங்குகைக்கு அது ஒரு மட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒரு கலைஞனின் படைப்புலகம் சுயமானதாக, தந்திரமானதாக, எவரது தலையீடுமற்றதாக இருக்கவேண்டும். என் தனிப்பட்ட கருத்துக்கள் எல்லாவற்றையும் என் படைப்புக்களில் பகிர என் பதவிநிலைஇடந்தராது என்பது யதார்த்தம். எனது ஓர் படைப்பின் கருத்தை எனது பதவியுடன் எனது வாசகர்கள் பொருத்திப் பார்ப்பதும் தவிர்கக முடியாதது என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே என் பதவி சிறுசிறு தடைகளைஎனக்கு ஏற்படுத்துகிறது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். என்றாலும் என் முழுமையான கலைப்பயணத்திற்கு தடையாகிறது அது என்றும் சொல்லமாட்டேன். அது பல நன்மைகளையும், வாய்ப்புக்களையும் மக்களுடன் நெருங்கி அவர்களின் எண்ணங்களுடன் பழகும் வரத்தையும் வழங்கியிருக்கிறது.

மேலும் சொல்லியே ஆகவேண்டும், என்பவற்றை குறியீடுகளாக சொல்லிவிடுவதுபெரிய விடயமில்லை. படைப்புகள் காலங்கடந்தாக, காலத்தைவென்றதாக மாறும் சந்தர்ப்பத்தில் பதவித் தடைகள் தகர்ந்துபோகும் என நம்புகின்றேன்.

**கேள்வி : ஓர் பிரதேச செயலராக இருந்து கொண்டு மக்களிற்கு சேவையாற்றும் நீங்கள் கலைத்துறையின் மூலம் மக்களை எவ்வாறு வழிப்படுத்தலாம் என்று எண்ணுகின்றீர்கள்?**

பதில் : இன்று மட்டுமல்ல என்றென்றும் எந்தளவு விஞ்ஞானம் நாகரீகம் வளர்ந்துயர்ந்தாலும், கலைகளின் அவசியம் இருக்கத்தான் போகிறது. ஏனென்றால் கலைகள் மனிதனின் உணர்ச்சிகளை

ஆற்றுப்படுத்துபவை. மனிதகுலம் வாழுமட்டும் மனிதன் உணர்ச்சிமயமானதாகவே இருக்கப் போகிறான். எனவே அவனை, அவனின் உணர்ச்சிகளை, ஆற்றுப்படுத்தும் கலைகள் வாழத்தான் போகின்றன. எனினும் அவற்றின் வடிவம், பிரயோகம், பரிமாணம், பயன்பாட்டளவு மாற்றத்திற்கு உள்ளாகலாம்.

நல்ல கலைகளைப் பயில்தல், அவற்றை இரசித்தல், அவற்றோடு ஊடாடுதல். அவற்றின் உண்மைகளை நீதிகளை அவை காட்டும் வழிகளை உணர்ந்து தம் வாழ்வைச் செம்மைப்படுத்தல், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவசியம் என்பேன். கலைகளோடு புழங்குபவனின் மனம் மென்மையடைகிறது. இதயம் ஈரம் மிகுந்ததாகின்றது. கண்கள் கருணை வயப்பட்டனவாகின்றன. அவன் பிழைகளை பாவங்களைச் செய்ய அஞ்சுவான். நீதி அறங்கள், வாழ்வின் விழுமியங்களை பின்பற்ற முயலுவான், அன்பின் அடிமையாவான். இன்று உண்மையான, நல்ல வாழ்வை மேம்படுத்துகிற, கலைகளை எல்லோரும் அறிகிறார்களில்லை. இன்றைய தொடர்பு ஊடகங்களில் இலகுவாக கிடைப்பவை, மலினமான இரசனையை வளர்ப்பவை தான் உச்சமான கலைகள் என்ற அபிப்பிராயம் இன்றைய இளைய தலைமுறையிடம் வேரூன்றி விட்டது. அவர்கள் அறிந்தது அவ்வளவே. வரலாற்றில் நல்ல கலைகள் மக்களை ஆற்றுப்படுத்தியதற்கான ஆதாரங்கள் ஆயிரம் உள்ளன. இந்த அடிப்படையில் நல்ல கலைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், அவர்கள் நல்ல கலைகளை பயில வைப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல வழிகாட்டலாம் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

செவ்வி : றெ.ஜனுசன்

ஊடகவியல் மாணவன்

< < < < < < < < < < < < <

- முதன் முதல் கண் வங்கியை ஆரம்பித்த நாடு : இலங்கை
- ஜப்பானிய தேசிய உடையின் பெயர் : கிமோனோ
- சோகத்தை குறிக்கும் இராகம் : முகாரி
- உலகிலேயே குறைந்த நேரம் தூங்குபவர்கள் : சீனர்கள்
- தனி மனித வருமானம் அதிகமுள்ள நாடு : லக்ஸம்பேர்க்




VINMEEN RESTAURANT
& BAKERY
உயர்தர சைவ அசைவ உணவு வகைகள்,
வெதுப்பக உற்பத்திகளிற்கு
நெல்லை நகரில் சிறந்த தெரிவு
Main Street,
Nelliady, Karaveddy. T.P : 0221226105I

## கறுப்பு ஒளி என்றால் என்ன?

மேலே உள்ள கேள்வியை படித்ததும் ஒளி எங்காவது கறுப்பாக இருக்குமா? என்ற சந்தேகம் எழும். வெண்மை உட்பட பல்வேறு வண்ணங்களில் வெளிச்சத்தையும் வெளிப்படுத்தும் ஒளி கறுப்பாக எப்படி இருக்க முடியும் என்ற கேள்வியும் எட்டிப்பார்க்கும்.

ஆனால் கறுப்பு ஒளியை வெளிப்படுத்தும் விளக்கு உள்ளது. அதுவும் பல்வேறு வகையில் கறுப்பு ஒளி விளக்கு இருக்கிறது. இந்த கறுப்பு ஒளிவிளக்கு பல்வேறு பயன்பாட்டிற்கும் உதவுகின்றது.

முதலில் கறுப்பு ஒளி விளக்கு என்றால் என்ன என்று பார்ப்போம் "புற ஊதா கதிர்களை வெளிப்படுத்தும் விளக்குகள் கறுப்பு விளக்குகள் என்று அழைக்கப்படுகின்றது."

இந்த கறுப்பு விளக்குகள் வெளியிடும் புறஊதா கதிர்களை சாதாரணமாக கண்களால் பார்க்க முடியாது இருட்டாக இருக்கும் அறையில்தான் இந்தஒளியை காணமுடியும். புறஊதா கதிர்கள் பட்டால் ஒளிரும் தன்மையுள்ள பொருட்களின் மீது இந்த கறுப்பு ஒளியைப் பாய்ச்சும் போது அவை ஒளிரும் தன்மை கொண்டவை.

ரூபாய் தாள்களில் உண்மை தன்மையைநிரூபிக்க அவற்றில் வெள்ளை நிறக் கம்பி இருப்பதைப் பார்த்து இருக்கலாம். இதை புற ஊதாக் கதிர்களில் காட்டும் போது அந்த கம்பி இழையம் அதில் மறைந்துள்ள இரகசிய எழுத்துக்களும் தெளிவாகத் தெரியும் இதன் மூலம் கறுப்புப்பணம் கண்டுபிடிக்க முடியும். இது போல பழங்கால ஓவியங்கள் மற்றும் சில அபூர்வ பொருட்களை கண்டுபிடிக்க கறுப்பு ஒளி உதவுகின்றது. மேலும் தடயவியல் துறையிலும் குற்றங்களை புலனாய்வு செய்ய ஒளி எனப்படும் புற ஊதாக்கதிர்கள் பயன்படுகின்றன.

ம . நிதர்சனா

ஊடகவியல் மாணவி


**SG சாந்தன் இசைக்குழு மீண்டும் .......**

**ஈழத்தின் பிரசித்திபெற்ற மூத்த பாடகர் SG சாந்தன் வழிகாட்டலின் கீழ் சூப்பர் ஸ்ரார் சலன்ஜ் கோகுலன், சக்தி சூப்பர் ஸ்ரார் சுலக்ஸன், மது, இணைந்து வழங்கும் அதிரடி இசை நிகழ்ச்சி**


**கோயில் வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகள் அனைத்திற்கும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.**

அனுசரணை : சிவன் வெதுப்பகம் நிலாவரை.

T.P : 0771313624 0777922156


## கணனி வன்பொருள் (Computer Hard ware)

கணனி (Computer) என்பது கட்டளைத் தொகுதிகள் அல்லது (Instrucion Sets) நிரல்களின் (Programs) மூலம் சில கணக்குகளைச் செய்யும் இயந்திரம் முதலிய 1940 களில் அறிமுகப்படுத்தப்பட்ட முழுமையான Electronic கணனிகள் பிரமாண்டமாக இருந்தன. அவற்றில் பலர் இணைந்து பணிபுரிய வேண்டியிருந்தது. அந்த தொடக்க காலத்து கணனிகளுடன் ஒப்பிடும் போது இன்றை கணனிகளுடன் ஒப்பிடும் போது இன்றை கணனிகள் பிரமிப்பூட்டுகின்றன. அவை பழைய கணனிகளை விட பல்லாயிரம் மடங்கு வேகமாக இயங்குவது மட்டுமல்ல அவற்றை உங்கள் மேசை மேல், மடி மேல் அல்லது சட்டை பைக்குள் கூடவைக்கலாம்.



பொதுவாக கணனி இயந்திரம் Hard Ware (வன்பொருள்) மற்றும் Soft Ware (மென் பொருள்) இடையிலான பரிமாற்றதத்தின் மூலம் இயங்குகின்றது.வன்பொருள் (Hard Ware) என்பது நீங்கள் பார்க்கவும் தொடவும் முடியும் பாகங்களை குறிக்கிறது. அதில் கணனிப் பெட்டிகளும் அதில் உள்ள அனைத்தும் அடங்கும்.

வன்பொருள் மிக முக்கியமானது உங்கள் கணனியில் உள்ள மையச் செயலகம் (CPU) நுண் செயலி (Micro Rectangular Chip) இதுதான் உங்கள் கணனியின் மூளை (Brain) போல கட்டளைகளை புரிந்து கொண்டு கணக்கிடுவது அந்தப் பகுதிதான்.



### கணனி வன்பொருள் வினைஞர்

### (Computer Hard Ware Rechnican)

நாம் இப்போது தகவல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இத் தகவலை பெறுவதற்கான கருவிகளாக கணனிகள் உள்ளன. கணனி வன்பொருள் வினைஞனுக்கான வேலைத்திட்டத்தில் கணனிகளையும் அதனுடன் தொடர்பான உபகரணங்களையும் நிறுவி, பரீட்சித்து கோளாறுகளுக்கேற்ப துலங்குவதற்காக கற்கின்றார்கள்.

கணனி வன்பொருள் வினைஞருக்கான தொழிற்சந்தை தற்போது மெய்யாகவே சர்வதேயமாகிவிட்டது. கணனி வன்பொருள் தொழிலினூடாக தம் வாழ்நாள் தொழில் ஏணிப்படிகளை கடந்து செல்வதற்கான எத்தனையோ வாய்ப்புக்களை நாம் இன்று காணக் கூடியதாக உள்ளது. இத்தேசிய மட்ட நிதானமானது தொழிலினால் வேண்டப்படுகின்ற சர்வதேசத் தரங்களை பயிலுனர்கள் அடையச் செய்யும்.

தகவல் தொழில் நுட்பமானது தொடர்ந்தும் மாறிக் கொண்டே இருக்கின்றது. புதிய முறைகள், புதிய பொருட்கள், புதிய இயந்திரங்கள், புதிய நியமங்களும், தரங்களும் அதிகரித்து வருகின்ற தரங்களின் மீதான கேள்விகள் முதலியன தொடர்ந்து அபிவிருத்தியடைந்து வருகின்ற ஒரு தொழிலாக அதனை ஆக்கியுள்ளன. பணிகளை அதிகமாகப் பயன்படுத்துவதற்கேற்ப கணனி வன்பொருள் வினைஞருக்கான

தேவையும் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளது. இவ்வாறான கேள்வியானது கணணி வன்பொருள் வினைஞர்களுக்கு இருக்கின்ற தொழில் வாய்ப்புக்களின் அளவை எடுத்துக் காட்டுகிறது.

கணணி வன்பொருள் வினைஞர் நாட்டினுள்ளும், வெளியிலும் தொழிலைத் தேடிக் கொள்ள முடியும். உதாரணமாக மத்திய கிழக்குநாடுகளிலோ அல்லது நடுத்தரமான முதலீட்டுடன் ஒருவர் தாமே தம் வியாபாரத்தை ஆரம்பிக்கலாம்.

இந்த வேலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்த பின்னர் பயிலுனர்கள் களத்தில் இயங்கும் சேவை வினைஞராக, களப் பொறியியலாளராக, கணணிச் சேவை வினைஞராக, கணணி நிறுவும் வினைஞராக அல்லது நுண்கணணி வினைஞராக விரும்பியவாறு தேடிக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இத்தொழிலைப் பொறுத்தளவில் முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்கள் பிரமாதமாக உள்ளன. தொழில் வினைஞர் நிலையில் ஆரம்பிக்கும் ஒருவர் சிரேஷ்ட தொழில் வினைஞர், சேவை முகாமையாளர் அல்லது பழுதுபார்க்கும் சேவை பற்றிய சுயதொழில் கூட ஈடுபடலாம்.

## கணணி வன்பொருள் பொறியியலாளர் (Computer Hard Ware Enginneer)

கணணிப் பொறியியல் என்பது கணணியையும் அதைச் சார்ந்த பொருட்களையும் பற்றிப் படிக்கும் பொறியியல் பிரிவு ஆகும். இதில் கணணி எவ்வாறு இயங்குகிறது என்றும் அதிலுள்ள மென்பொருட்கள், வன்பொருட்கள் (Software) (Hared Ware) எவ்வாறு இயங்குகிறது அது எப்படி செயற்பட்டுள்ளது என்பது குறித்தும் அப்பொருட்களை தயாரிக்கும் முறைகளையும் இப்பிரிவு விளக்குகிறது.

பல வன்பொருள் கணணிப் பொறியியலாளர்கள் பல்வேறு கணணி உபகரணங்களை ஆராய்தல், விருத்தி செய்தல், வடிவமைத்தல் மற்றும் பரிசோதித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுகின்றனர். இவ் உபகரணங்கள் மின் சுற்றுப் பலகைகள் மற்றும் நுண்செயல்களில் இருந்து (Micro Processor) திசைவிகள் (Routers) வரை பல்வகைப்படும். சிலர் கணணி உபகரணங்களை சிறப்பாக இயங்கும் வகையில் இற்றைப்படுத்துபவர். பல வன்பொருள் கணணி பொறியியலாளர்கள், ஆராய்ச்சிக்கூடங்கள் மற்றும் தொழில்நுட்பத் தயாரிப்புத் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர். அமெரிக்க நாட்டு புள்ளி விபரங்களின் படி 95% வன்பொருள் கணணிப் பொறியியலாளர்கள் அந்நாட்டின் பெரு நகரப் பகுதிகளிலேயே பணிபுரிகின்றனர். பெரும்பாலும் இவர்கள் முழுநேரப் பணியாளர்களாகவே உள்ளனர். இவர்களின் வேலை நேரம் 40 மணி நேரத்திலும் அதிகமாகும். வருடமொன்றிற்கு 98810 அமெரிக்க டொலர்களைச் சம்பளமாகப் பெறுகின்றனர். அதாவது 47.50 டொலர்களாகும். 2010 ல் கணணி வன்பொருள் பொறியிலாளர்களுக்கு 70000 வேலை வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

த.ஜெனித்தா
ஊடகவியல் மாணவி

*எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன*
*ஒன்று காலம் இன்னொன்று மௌனம்.*

# துணைச் சேவைகளின் முன்னேற்றம்

மாற்றுப் பொருளாதாரத்தின் குறைபாடுகள் நிவர்த்தி பெற தோற்றம் பெற்றதே பணம் என்ற பொதுவான ஊடகம் ஆகும். இது ஆரம்பகாலங்களில் பொருள் பாவனை. உலோக வகை பாவனை, உலோக நாணய குற்றிகளின் பாவனை, தாள், குற்றி நாணயம், பணம் என விரிவடைந்த உலகினைச் சுருக்கி உலகமயமாக்கலுக்கு வித்திட்டு விட்டது.

தற்காலத்தில் புழக்கத்தில் அதிகமாக காணப்படும் இலத்திரனியல் பணமான தகவல் டிஜிற்றல் தொழில் நுட்பத்தின் பெறுபேறாக உருவாகி உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள பயன்படுத்தும் பணமாகிறது இதில் கடனட்டை வரவட்டை, முற்செலுத்திய அட்டை என்பன உள்ளடங்கும். இவற்றின் வளர்ச்சிகளால் தோற்றம் கண்டதே வங்கி, காப்புறுதி, தொடர்பாடல், போக்குவரத்து என்னும் துணைச் சேவைகளாகும்.

வங்கிகளுக்கு எல்லாம் ஆதார நிறுவன அமைப்பாக விளங்குவது மத்திய வங்கி என்னும் அரசாங்க அமைப்பே ஆகும். இலங்கையில் நாணயத்தை வெளியிடும் உரிமைகள் மத்திய வங்கிக்கே உரித்தானதாகும் மத்திய வங்கிக்கு கீழ் காணப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் பணவாக்கத்தை உருவாக்கம் ஆற்றல் கொண்ட வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் நடைமுறை கணக்கினை பேணாது இருப்பதுடன் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதி பெறவிருப்பது இவற்றின் விசேட பண்பாகும்.

காப்புறுதி என்பது பணரீதியாக அளவிடக்கூடிய நட்ட அச்சமொன்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தை நட்ட அச்சம் எனலாம். இதனை ஈடு செய்ய உருவாக்கப்பட்ட அமைப்பே காப்புறுதியில் காப்புறுதித்துவம் உரிமை, மிக்குயர்நம்பிக்கை தத்துவம், இழப்பீட்டுத்தத்துவம், பங்களிப்புத் தத்துவம், அண்மைக் காரணி தத்துவம், பதிலாள் வைப்புத் தத்துவம் போன்ற தத்துவங்கள் காப்புறுதி நிறுவனங்களாலும், காப்புறுதித் தத்துவங்களாலும் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டியவையாகும்.

போக்குவரத்து என்னும் போது வணிக நிறுவனங்களினதும் தனி நபர்களினதும் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்காக துணைச் சேவைகளின் ஒன்றாக போக்குவரத்து விளங்குகின்றது. இது பாதை, சாதனம், சக்தி, தரிப்பிடம் என்னும் அடிப்படை அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு விளங்குகிறது. இது தரை, ஆகாயம், கடல் என்னும் பிரதான மார்க்கங்களின் ஊடாக இன்று சுரங்கவழி மேம்பால வழி, அதிவேக நெடுஞ்சாலை, கம்பி போக்குவரத்து, மின்சார தொடர்பூர்திகளை பயன்படுத்தல் போன்ற முறைகளின் ஊடாக நவீனத்துவம் அடைந்து வருகிறது.

தொடர்பாடல் என்பது ஒரு தரப்பிலிருந்து இன்னொரு தரப்பினருக்கு அல்லது பல தரப்பினருக்கு தகவல்களை அனுப்புதல், பெறுதல், தகவல்களை விளங்கிக்கொள்ளுதல், பகிர்ந்து கொள்ளுதல்களை உள்ளடக்கியது ஆகும். இது எழுத்துமுறை, வாய்மொழிமுறை, சமிஞ்ஞை முறை என்பவற்றை உள்ளடக்கி உள்ளது. இணையம், இலத்திரனியல், தபால், அக இணையம், குரல் அஞ்சல், தொலைநகல் இயந்திரம் போன்றன நவீன இலத்திரனியல் தொடர்பாடல் முறைகளாகும்.

இவ்வாறு இன்று மனித வாழ்வியலோடு மிகவும் பின்னிப்பிணைந்துள்ள அத்தியாவசிய தேவையாக துணைச்சேவை விளங்குவதோடு இவை நவீன உலகமயமாக்கல் கொள்கைக்கும் அவசிய ஆயுதமாக மாறியுள்ளமை கண்கூடு ஆகும்.

வா.ஜெயமீரா
ஊடகவியல் மாணவி.

# பச்சை ஆட்டோ....

"தயவு செய்து என்னை மறந்து விடுங்கள்" என்ற வார்த்தைகள் மட்டுமே இருந்தன. குறுந்தகவலானது காலை ஐந்து முப்பது (5.30) மணிக்கே வந்திருந்தது. நான் இரவு பூராவும் பேசிக்கொண்டே இருந்தேன். அப்போது அவர் வீட்டில் ஒரு பிரச்சினையும் இல்லை. உம்மாவும் வாப்பாவும் இந்த விடயத்தைப் பெரிதுபடுத்த மாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்லி விட்டார்.

தீயிலே விழுந்த புழுப்போல ஓவியாவின் உள்ளமானது துடிதுடிக்க உட்கார்ந்திருந்தன. அவளுடைய உள்ளத்திலே பலவிதமான எண்ணங்கள் அலைவீச ஆரம்பித்தது. "ஏன் இப்படியாக அனுப்பினார்" ஒரு வேளை விளையாட்டிற்காகத்தான் இப்படி அனுப்பினாரோ, தமக்கை மீது மிகுந்த பாசம் ஒரு வேளை அதற்குக் கட்டுப்பட்டு விட்டாரோ" இப்படியான எண்ண அலைகள் நாளங்களூடாக ஓடிப்பாய்ந்து புலன்களையே செயலிழக்கச் செய்து கொண்டிருந்தது.


இடிந்து போனவள் ஒருவாறு தன்மனதைத் தேற்றிக் கொண்டு சமீருக்கு அழைப்பினை ஏற்படுத்தினாள். "தயவு செய்து உங்கள் தொலைபேசி இலக்கத்தைச் சரி பார்க்கவும்" என மூன்று மொழிகளிலும் கூறக்கேட்டு ஓவியாவின் விழிகளில் இருந்து நீர் மளமளவென சொரிந்தது.

ஆனால் இவ்வளவு விரைவில் என்ன நடந்தது நன்றாகத்தானே பேசிக் கொண்டிருந்தார். வல்லிபுரக்கோவில் திருவிழாவின் போது தான் நான் அவரை முதல் முதலாகச் சந்தித்தேன். நன்றாகத்தான் சிரித்துப் பேசினார். சமீர் அவர் ஒரு இஸ்லாமியராக இருந்தபோதும் என்னோடு பேசும் போதும் எல்லா மதமும் ஒரே இறைவனைத்தான் வழிபடுகின்றார்கள் வழிபாட்டு முறைகள் தான் மாறுபடுகின்றதே அன்றி வேறு ஒரு வேறுபாடும் இல்லை என்று கூறினார். அதன் பின்பு தான் என்னுடைய பார்வை அவர் பக்கம் சாய ஆரம்பித்தது.

காலையாக இருந்தாலும் சரி மாலையாக இருந்தாலும் சரி, இரவாக இருந்தாலும் சரி எனது குரலைக் கேட்காவிட்டால் உண்ண முடியவில்லை, உறங்க முடியவில்லை, எதுவுமே செய்ய முடியவில்லை என்று அடிக்கடி என்னிடம் கூறுவார்.

"என்னம்மா தனிய இருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிற", "ஒண்டும் இல்லைத் தாத்தா" சாதாரணமாகப் பதில் சொன்னாள். தாத்தா ஒரு சட்டத்தரணியாக இருந்து ஓய்வு பெற்றவர். அவருக்குத் தெரியாதா என்ன, பேர்த்தியினுடைய தடுமாற்றம்.

"பொய் சொல்லாதம்மா" எதுவா இருந்தாலும் உன்ர தாத்தாகிட்டச் சொல்லு. நான் பாத்துக்கிறன்" என்றார் தாத்தா. தாத்தாவின் விழிகளை உற்றுப்பார்த்த ஓவியா கண்களில் நீர் சொரிய மடியிலே விழ்ந்து புரண்டு அழுதாள்.



தாத்தாவின் வினாக்களுக்கு இன்னும் ஓவியா பதிலளிக்கவில்லை. ஏன் என்றால் "என்னை மறந்து விடுங்கள்" என்பது ஒருமை அல்ல அது பன்மை. ஒருமை என்றால் ஒருவாறு தேற்றிவிடலாம். பன்மை என்றால் உலகமே பழியை ஏற்றி விடுமே. அதனால் தானோ என்னவோ தெரியவில்லை. ஓவியாவின் வாயிலிருந்து வார்த்தைகள் புறப்படவில்லை.

இப்போது தாத்தாவின் மடியில் இருந்து எழுந்து விரைவாக ஓடிச்சென்று வீட்டின் கதவைப் பூட்டிக் கொண்டாள். தாத்தா சட்டத்தரணி என்ற படியால் இதை அறியும் ஆவல் அவரை விட்டு வைக்கவில்லை. உடனே தாத்தா வீட்டிலிருந்து புறப்பட்டு ஓவியாவின் நண்பி சைந்தவியைச் சந்தித்துச் சாதாரணமாகத் தன்னுடைய பாணியிலே பேச்சை ஆரம்பித்தார். பின்பு படிப்படியாக ஓவியாவைப் பற்றிய வெளித் தொடர்புகளையும் சமயோசிதமாக அறிய முற்பட்டார்..

சைந்தவி திடீரெனத் தன்னையே மறந்து முழுவதையும் வரிசைப்படுத்தி கூற ஆரம்பித்தார். நானும் ஓவியாவும் வல்லிபுரக்கோவில் உற்சவத்திற்காகத் தினந்தோறும் போய்வரும் போதெல்லாம் ஒரு பச்சை ஆட்டோவில் தான் போய்வருவது வழக்கம்.

அந்த ஆட்டோ ஓட்டும் அண்ணன் சிரித்து அன்பாகப் பேசினார். நாங்கள் வரும்போதும் அவரே காத்து நின்று எங்களை ஏற்றிக் கொண்டு வருவார். முதல் இரண்டு தினங்களுக்குப் பின் எங்களிடம் பணமும் கேட்பதில்லை. நாங்கள் கட்டாயப்படுத்தினாலும் பேசி ஒருவாறு சமாளித்து விடுவார். ஒரு நாள் நான் கோவிலுக்குச் செல்லவில்லை. அவள் மட்டுமே அந்த அண்ணாவோடு சென்றாள்.

அன்று என்ன நடைபெற்றது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதன் பின்பு அவள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள். எங்கு செல்வதாக இருந்தாலும் என்னை அழைத்துக்கொண்டு தான் செல்வாள். அதற்குப் பின்பு என்னுடைய உதவியை அவள் நாடுவதும் இல்லை. தொலைபேசியில் கூட என்னுடன் பேசுவது குறைவு. நானாகத் தொலைபேசி எடுத்தாலும் "Number Busy" என்றே தான் வரும்.

இறுதியாக நானும் அம்மாவும் யாழ்ப்பாணத்தில் ஒரு வாரத்திற்கு முன்பு அவளைக் கண்டோம். அவள் எங்களைக் காணவில்லை. புடவைக்கடையில் "சேட்" எடுப்பதற்காகப் பார்த்துக் கொண்டு நிற்கும் போது நான் அவளின் கையை எட்டிப்பிடித்தேன். அப்போது அவள் அருகிலே அந்த அண்ணனும் நின்று கொண்டிருந்தார். என்னால் அப்போது அவளுடன்அதிகமாகப் பேச முடியவில்லை தாத்தா என்று கூற தாத்தாவின் முகமானது முற்றாக மாறுபட்டுக் குரல் கரகரக்கத் தொடங்கியது. மயக்கமுற்றுத் தரையிலே வீழ்ந்தார். எந்த விதமான வார்த்தைகளும் பேசவில்லை.

உடனே சைந்தவி அருகிலிருந்த மருத்துவமனைக்கு முச்சக்கரவண்டியின் உதவியுடன் அவரை அழைத்துச் சென்றாள். அங்கே மருத்துவர்கள் இப்போது எதுவும் எங்களால் சொல்ல முடியாது என்று கூறிவிட்டார்கள். உடனே சைந்தவி இச்செய்தியினை ஓவியாவின் அம்மாவிற்குத் தெரிவித்தாள். ஓவியாவின் அம்மா தங்கம்மா பதறி அடித்துக்கொண்டு ஓடி வந்தாள் வைத்தியசாலைக்கு.

அப்போது ஓவியாவும் தொடர்ந்து வந்தாள். தாத்தா ஓரளவு சமநிலைக்குத் திரும்பிவிட்டார். பின் தாத்தாவின் நிலைக்குத் தான் தான் காரணம் என்பதை அறிந்து ஓவியா அனைவர் முன்னிலையில் அத்தனை விடயங்களையும் மனம் திறந்து கூறினாள்.

இதனைக் கேட்ட தாய் தங்கம்மா அதிர்ச்சியடைந்து தரையிலே சாய்ந்தாள். இளம் வயதிலே தங்கம்மாவின் கணவன் இறந்து விட்டார். பின் தாத்தாவினுடைய உதவியுடனேயே மகள் ஓவியாவை வளர்த்தாள். எத்தனை கஷ்டங்கள் ஏற்பட்டாலும் மகளுக்கு காட்டிக்கொள்ளாமலேயே வளர்த்து விட்டாள்.

தாய் துக்கத்திலே எத்தனையோ வார்த்தைகளைத் தூற்றினாள். இதனைக் கேட்டதும் குற்றம் செய்தாலும் இளமைத் துடிப்பு அவற்றையெல்லாம் நியாயப்படுத்துவது இயல்பு தானே. அணிந்திருந்த மோதிரத்தைக் கழற்றி விற்று விடலாம் எனத் தீர்மானித்தாள். பின் ஒரு நகை மாளிகைக்குச் சென்று இந்த மோதிரத்தை வைத்துக் கொண்டு எனக்கு இதற்குரிய பணத்தைத் தாருங்கள் என்று வினவ அந்த முதலாளியின் பார்வையில் இவள் மீது சந்தேக அலைகள் வீச ஆரம்பித்துவிட்டது.

இருந்தாலும் இளம்பிள்ளை என்ற படியால் அவர் பெரிதாக கருசனை காட்டவில்லை. பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டார். கடையிலிருந்து வெளியே வரும்போது தூரத்தில் ஓர் ஆட்டோ வருவதைக் கண்டாள். அது பச்சை ஆட்டோ அப்போது அவளது உள்ளத்திலே ஓர் இனம்புரியா மகிழ்ச்சி உருவெடுக்க ஆரம்பித்து விட்டது. இது நீடிக்குமா? என்ற ஐயமும் மறுமுனையில் இரு நிலையிலும் ஆட்கொள்ளப்பட்டாள்.

அதோ அந்தப்பச்சை ஆட்டோ இவ்வழியாகத்தான் வருகின்றது....... அருகில் வந்தவிட்டது கையை நீட்டி மறிப்பதற்கு முன்னே செல்கின்றாள்....

கவிஞர் ச.அன்ரனி

## வெயிலை சமாளிக்க அட்டகாசமான குறிப்புக்கள் :

- வெயிலுக்கு உகந்தது கதராடை உடலில் உண்டாகும் வியர்வையை உறிஞ்சுவதுடன் வியர்க்குரு வருவதையும் தடுக்கும்.
- வெயில் காலங்களில் ஓட்டை விழுந்துள்ள ஓசோன் மண்டலத்தின் வழியாக அதிகமான “அல்ட்ரா வைலட்” கதிர்கள் பாயும் இதனால் கண்கள் பாதிக்கப்படும் இதனை தவிர்க்க “ஆட்டோ ரிப்லக்ஸன் கிளான்” அணிவது நல்லது.
- உடல் சூட்டையும் தோல் நோயையும் தவிர்க்க அதிக இளநீா அருந்துவதுடன் நுங்கு, வெள்ளரி, தா்ப்பூசணி அதிகம் சாப்பிட வேண்டும்.
- Gass நிரம்பியுள்ள குளிர்பானங்களை அருந்துவதை தவிர்த்து இந்த சீசனில் கிடைக்கும் பழ வகைகளை அதிகம் சாப்பிடுவது அவசியம்.
- ரோஜாப் பூ, குல்கந்து (தேனில் ஊற வைத்த ரோஜா இதழ்) சாப்பிட்டால் உஷ்ணம் குறைந்து உடல் குளிர்ச்சி ஏற்படும்.
- வட்டமாக அரிந்த வெள்ளரிக்காயை கண் மீது வைத்துக் கொண்டு உறங்கினால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.
- மருதாணியையும், கரிசலாங்கன்னி இலையையும் சேர்த்துக் காய்ச்சப்பட்ட தேங்காய் எண்ணெய்யை தலைக்குத் தேய்த்து படுத்து மறு நாள் காலை வில்வங்காய் கலந்த சிகைகாய் பொடி தேய்த்து குளிப்பது கோடை காலத்திற்கு உகந்தது.
- வியா்வை நாற்றத்தை போக்க குளிக்கும் போது எலுமிச்சம் பழத்தை அரிந்து அதனுடன் சிறிது உப்புத் தடவி கழுத்து, அக்குள் போன்ற பகுதிகளில் தேய்த்து குளித்து வந்தால் வியா்வை நாற்றம் வராது.
- குளிக்கும் போது தேய்ப்பதற்கென்று நாட்டு மருத்துவக்கடைகளில் தனியாக பொடி விற்கப்படுகிறது. இதனை வாங்கி சோப்பிற்கு பதிலாக பயன்படுத்தி வந்தால் முகத்திலும் உடலிலும் எண்ணெய் வழியாமல் இருக்கும்.

**********

### புராதன நூல்கள் - இலங்கை


- மகாவம்சம் எழுதியவர் : [redacted]
- சிங்கள மொழிப் பஞ்சாங்கத்தின் பெயர் : இரணம்
- இலங்கையின் மொத்த நிலப்பரப்பின் காடுகளின் வீதம் : 20 வீதம்.
- தமிழ் பஞ்சாங்கத்தின் பெயர் : வாக்கியம் திருக்கணிதம்
- யாழ்ப்பாணத்தில் பாய்கின்ற ஆற்றின் பெயர் : வழுக்கியாறு
- G.S.T விரிவாக்கம் : Good and Service Tax பொருட்கள் சேவைகள் வரி


SELLAMUTHUS
TEXTILES
செல்லமுத்தாஸ்
புடவையகம்
பிரதான வீதி, நெல்லியடி.
தொலை. இல : 0212263238


புதிய வணிக ஒழுங்கின் அறிமுகம்!
NW
உங்கள் ஆதரவுடன் எமது வணிக சேவை தொடரும் ...
இது "நியூவே சொப்பிங் பொயின்ற்
நிறைவான நகர் நோக்கிய பயணம்.... ! "
NEW WAY SHOPPING POINT
சகல வகையான தானிய உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள், எண்ணை வகைகள்,
அழுகுசாதனப் பொருட்கள், வீட்டுப்பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்,
குழந்தைகளுக்கான பால்மாவகைகள், விளையாட்டுப் பொருட்கள்,மற்றும்
உங்கள் தேவைக்கேற்ப பாவனைப் பொருட்களுடன் குளிரூட்டப்பட்ட காட்சியறை.
Ferradura
NESPRAY
Anchor
Milgro
329/40, Main Street, Point Pedro.


NELLAI SILK
நெல்லை சில்க்
Lastest Designs of Textiles
S.Agilathas J.P
Proprietor
Main Street, Nelliady,
Tel : 0212263207


கிருபா லேணர்ஸ்
L
தலைமை அலுவலகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல : 021 222 4353
021 492 3200, 0777225292
பருத்தித்துறை
T.P 0214923201
0714546958
Regd No. Ds/589, Kiruba Learners, Govt. Approved
A Grade Driving Training School


MAHY
Beauty Parlour
Ladies Hair, Ladies Beauty,
Bridal Dressing
Mrs. Mathangi Sivakumar
Kiramakodu
Poht Pedro.
T.P - 0776244880